Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 8.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 20 திங்கட்கிழமை (04.07.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 197

ராம்கோ

MADRAS CEMENTS LTD

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது

RAMCO CEMENT

சீமெந்து



தமிழீழ விடுதலைப் புலிகளின் லெப்டினனட் கேணல் இம்ரான் பாண்டியன் படையணியின் அதிவேக மோட்டார் சைக்கிள் 2 ஆம் பிரிவினரின் சாகச நிகழ்வுகளையும், அவர்களின் அணிவகுப்பு மரியாதையையும் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் ஏற்றுக்கொள்வதை படங்களில் காணலாம்.

# பொதுக் கட்டமைப்பிற்கு எதிராக ஐ.நாவில் முறையிட ஜே.வி.பி. முடிபு

## உயர்மட்டம் கூடித் தீர்மானம்

(நமது நிருபர்)

**அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பொதுக் கட்டமைப்பில் கைச்சாத்திட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய நாடுகள் சபையில் முறையிட ஜே.வி.பி. முடிவுசெய்துள்ளது. ஜே.வி.பியின் உயர்மட்டக் குழுவினர் ஒன்று கூடி இத்தீர்மானத்தை எடுத்துள்ளதாக கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.**

ஐ.நா. சபையால் தடைசெய்யப்பட்ட இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசு பொதுக் கட்டமைப்பில் கைச்சாத்திட்டுள்ளது. இது இலங்கையின் இறைமையைப் பாதிக்கும் செயற்பாடாகும். இதனை ஒருபோதும் ஜே.வி.பி. அனுமதிக்காதென அக்கட்சி தெரிவித்துள்ளது.

நாட்டை விடுதலைப் புலிகளிடம் பிரித்துக் கொடுக்கும் செயற்பாட்டையே அரசு மேற்கொண்டுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு நாம் ஐ.நா. சபையில் முறையிட்டு தகுந்த தீர்வைப் பெறவுள்ளதாக விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இவ்வாரமளவில் இம்முறையீடு செய்துகொள்ளப்படுமென தெரிவிக்கப்பட்டது.

(ச-8)

## அதிவேக மோட்டார் சைக்கிள் அணியின் நிகழ்வில் தேசியத் தலைவர் பங்கேற்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் லெப்டினனட் கேணல் இம்ரான் பாண்டியன் படையணியின் அதிவேக மோட்டார்சைக்கிள் இரண்டாவது அணியினரின் பயிற்சி நிறைவில் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் கலந்து சிறப்பித்துள்ளார். இந்நிகழ்வில் மோட்டார் சைக்கிள் அணியின் இராணுவ மரியாதையை தேசியத் தலைவர் ஏற்றுக்கொண்டார். பின்னர் அப் படையணியின் சாகச நிகழ்வுகள், தாக்குதல் ஒத்திகைகள் என்பனவும் இடம்பெற்றன.

லெப்டினனட் கேணல் இம்ரான் பாண்டியன் படையணியின் சிறப்புத் தளபதி வேலகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கட்டளைத் தளபதிகள், சிறப்புத் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர். (ச)

## ஐக்கிய தேசிய கட்சியின் பேரணியில் ஜே.வி.பி ஆதரவாளர்கள் இணைவு

(கொழும்பு)

ளுக்கும் ஆப்புவைத்து கூட்ட

## கரும்புலிகள் தினம் ஜூலை – 05

(யாழ்ப்பாணம்)

தமிழர் தாயகப் பகுதியெங்கும் நாளை கரும்புலிகள் தினம்

லர் வீரச்சாவடைந்த நெல்லியடி மகா வித்தியாலயத்தில் நினைவு நாள் நிகழ்வுகளை மேற்கொள்வதற்

லும், தீவகத்தில் புளியங்கூடலிலும் பொதுக் கூட்டமும், கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

இதேவேளை கரும்புலிகளின்

(கொழும்பு)

மக்களை ஏமாற்றிய கூட்டமைப்பு அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புங்கள் என்ற தொனிப்பொருளில் 'மக்கள் சக்தியை' வெளிப்படுத்தும் ஐக்கிய தேசியக் கட்சியின் பேரணி நேற்று இரண்டாவது நாளாகவும் பிரமாண்டமாக நடைபெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சி ஏற்பாடு செய்து நடாத்தும் இவ் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுடன் ஜே.வி.பியின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள், பொதுமக்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

பேரணி சென்ற வீதிகளின் இருமருங்கிலும் இருந்து லட்சக்கணக்கான மக்கள் இணைந்துகொண்டனர். கூட்டமைப்பு அரசாங்கத்தினால் கூறப்பட்டுள்ள பொய்களுக்கும், ஏமாற்றும் செயல்களுக்கும் ஆப்புவைத்து கூட்டமைப்பு அரசாங்கத்தை அகற்ற வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடாத்தி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி பதவியில் அமர்த்தவேண்டும் போன்ற ஜன

(10 ஆம் பக்கம் பார்க்க)

தமிழர் தாயகப் பகுதியெங்கும் நாளை கரும்புலிகள் தினம் உணர்வெழுச்சியுடன் கொண்டாடப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நிகழ்வுக்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவை மேற்கொண்டுள்ளது.

முதற் கரும்புலி கப்டன் மில்லர் ... மகா வித்தியாலயத்தில் நினைவு நாள் நிகழ்வுகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளன.

வலிகாமத்தில் சங்கானை வடக்கம்பரையிலும், தென்மராட்சியில் மாவடிப் பிள்ளையார் கோயிலடியிலும், வடமராட்சியில் நெல்லியடி மகாவித்தியாலத்திலும் பொதுக் கூட்டமும், கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

இதேவேளை கரும்புலிகளின் உருவப்படங்கள் தாங்கிய ஊர்திகள் இன்றுமுதல் பவனியாக மக்கள் அஞ்சலிக்கு எடுத்துச்செல்லப்படவுள்ளன.

ஒவ்வொரு கோட்டங்கள் சார்

*(10 ஆம் பக்கம் பார்க்க)*

# சமாதானப்பேச்சு விரைவில்!

## அரச சமாதான செயலகம் நம்பிக்கை

(கொழும்பு)

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் விரைவில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகுமென அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பொதுக் கட்டமைப்பில் இருதரப்பினரும் கைச்சாத்திட்டதன் பின்னர் நல்லதொரு சூழ்நிலை உருவாகியுள்ளதாக தெரிவித்த அவர், இதுதொடர்பாக வெளிநாடுகளின் ஆதரவும் கிடைக்கப்பெற்றுள்ளது என்றார். பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் பதில் அனுப்பியதும் அதன் பின்னர் தாம் அடுத்தகட்ட நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாக அவர் கூறியுள்ளார். (ச)

# விமான ஓடுபாதையை பார்வையிட விரைவில் புலிகள் அனுமதியளிப்பர்

## கண்காணிப்புக்குழு நம்பிக்கை

(கொழும்பு)

இரணைமடுவிலுள்ள புலிகளின் விமான ஓடுதளத்தைப் பார்வையிட அவர்கள் விரைவில் அனுமதி தருவார்கள் என போர் நிறுத்தப் கண்காணிப்புக்குழு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை கண்காணிப்புக் குழுத் தலைவருடனான சந்திப்பின்போது இது குறித்துப் பேசப்பட்டதாக அதன் பேச்சாளர் ஹெலன் தெரிவித்துள்ளார்.

இரணைமடுவிலுள்ள விமான ஓடுதளம் தொடர்பில் மீண்டும் கருத்துத் தெரிவிக்க புலிகள் மறுத்துவிட்டதாக அவர் கூறினார்.

*(10 ஆம் பக்கம் பார்க்க)*

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-234999
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# புதிய அரசை இவ்வருடம் அமைப்பதற்கு மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும்

## -ரணில் விக்கிரமசிங்க

(தெவிநுவர)

புதிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கான சந்தர்ப்பத்தை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் பலாத்காரமாக ஆட்சியினை நடாத்தி வருவதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

மக்கள் சக்தியை வெளிப்படுத்தும் வகையில், ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுமுன்தினம் தெவிநுவரவில் ஆரம்பித்த பேரணியின் ஆரம்ப வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

மக்களை ஏமாற்றிய கூட்டமைப்பு அரசாங்கத்தை விரட்டியடிப்போம் என்ற தொனப்பொருளில் இப் பேரணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெளிநாடுகளால் வழங்கப்பட்ட அனைத்து உதவிகளும் உரிய முறையில் பாதிக்கப்பட்ட அனைத்து உதவிகளும் உரிய முறையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவில்லை. மக்களின் உரிமையினைப் பறிக்க எவருக்கும் அனுமதிக்கப் போவதில்லை.

நாளுக்கு நாள் வாழ்க்கைச் செலவு அதிகரித்துச் செல்கின்றது. கையில உள்ள நிதியின் மதிப்போ வெகுவாகக் குறைந்து வருகிறது. இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற வேலைகளைச் செய்யவில்லை.

பொய் வாக்குறுதிகளையே அவர்கள் மக்களுக்கு அள்ளி வழங்கினர். மக்களைப் பற்றி சிறிதளவு கூட நினைக்கவில்லை. தம்மைப் பற்றியும், தமது ஆட்சியைப் பற்றியுமே நினைத்துச் செயற்பட்டனர்.

இப்படியானதொரு சூழ்நிலையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் எப்படி அரசாங்கத்தைக் கொண்டு நடாத்த முடியுமென உறுதிமொழிகளை நிறைவேற்ற முடியாமல் தவிக்கும் ஜனாதிபதிக்கு உதவிக்கரம் நீட்ட யாரும் முன்வரவில்லை.

ஜனாதிபதியும் அவரின் கூட்டாளிகளும் அதிகாரத்தின் மீது ஆசைப்பட்டு மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றி வருகின்றனர்.

சுனாமி நிதியினை சூறையாடினர், அவ்வாறாயின் மக்களுக்குப் புதியதொரு அரசாங்கத்தை ஏற்படுத்த மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை



வழங்குங்கள் என்றே கூறவேண்டியுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் தான், இந்த வருடம் இவ்வாறான ஓர் அரிய சந்தர்ப்பத்தைக் கோருகின்றோம்.

ஜனாதிபதித் தேர்தலொன்று தற்சமயம் இந்த நாட்டில் நடத்தப்படுவது அவசியமாகும். அரசியல் யாப்பில் தற்போது ஜனாதிபதித் தேர்தல் மூலம் புதிய அரசாங்கத்தைத தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பம் ஒன்றுள்ளது என்றும் குறிப்பிட்டார். (ற-4)


## சிறுவிளம்பரம்

### மலயாள பகவதி ஜோதிடாலயம்

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள் கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை, தொழில், வியாபார இலட்சிகர விடயங்கள். வவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு,

**ஹோட்டல் பிள்ளையார் இன்**
**அறை இல.09,**
**31, மானிப்பாய் வீதி**
**யாழ்ப்பாணம்.**
**T.P - 0779122836**
**நேரம் காலை 9.00 -**
(9567) **இரவு 8.30 வரை**

### வெளிவந்துவிட்டது

**க.பொ.த. உயர்தரப் புவியியல் மாணவர்களுக்கான சூழல் முகாமைத்துவமும் பாதுகாப்பும் ஆசிரியர் கணேசபிள்ளை சிவகரன் (B.A.Hons DiplnEd) எல்லாப் புத்தகசாலையிலும் கிடைக்கும்.** (9720)


# குழப்பத்தை அடக்கக் கொழும்பு நகரில் 650 பொலிஸாருக்கு விஷேட பயிற்சி

(கொழும்பு)

கொழும்பு நகரில் குழப்பநிலை ஏற்பட்டால் அதனைக் கட்டுப்படுத்தக் கூடிய வகையில் பொலிஸ் குழுவொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கென தெரிவு செய்யப்பட்ட 650 பொலிஸாருக்கு பயிற்சிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் வூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏனைய பிரதேசங்களிலிருந்தும் திறமை வாய்ந்த 250 பொலிஸ் அதிகாரிகளுக்கும் இந்தப் பயிற்சிகளை வழங்குவதற்கு அவர்கள் கொழும்பிற்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்த அதிகாரிகளுக்கு சாதாரண சட்டத்தின் கீழ் செயற்பட்டு குழப்பம் விளைவிப்போரைக் கலைப்பது குறித்து விஷேட பயிற்சிகள் வழங்கப்படுவதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பயிற்சிகள் கொழும்பு பொலிஸ் படை தலைமையகத்தில் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குழப்பம் விளைவிப்போரை கலைக்கும் போது அவர்களுக்கு உடல் ரீதியாக எந்தவித பாதிப்பும் ஏற்படா வகையில் நடவடிக்கை எடுப்பது குறித்தும், இவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பயிற்சியை முடித்துக்கொள்ளும் பொலிஸ் அதிகாரிகள் கொழும்பு நகரின் பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பப்படுவார்கள். அவர்கள் வேறு எந்த பொலிஸ் கடமைகளிலும் ஈடுபடமாட்டார்கள் எனப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அழைக்கக் கூடிய விதத்தில் இந்த விஷேட படை அதிகாரிகளை தயார் நிலையில் வைத்திருப்பதற்கும் அவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸ்மா அதிபர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

## இராசிபலன்

**04.07.2005**
**(ஆனி 20, திங்கட்கிழமை)**
**திரயோதசி பிற்பகல் 3.12 மணிவரை**
**ரோகிணி பிற்பகல் 01.11 மணிவரை**
**இராகுகாலம் 7.27 - 08.57 மணிவரை**
**சுபநேரம் 11.57 - 01.27 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | தொழில் மந்தநிலை, எதிர்பாராத செலவு, பித்தரோகம், வீண்பகை. |
| இடபம் | நண்பர்கள் சந்திப்பு, சயன சுகம், பெரியோர் ஆதரவு, நல்ல முயற்சி. |
| மிதுனம் | காரிய தாமதம், மனக்கிலேசம், எதிர்பாராத செலவு, தொழில் மந்தநிலை. |
| கடகம் | செய்தொழில் முன்னேற்றம், நண்பர்கள் உதவி, தனலாபம், காரிய சித்தி. |
| சிங்கம் | அதிகாரம், தொழில் நன்மை, தூரதேச செய்தி, த்டைப்பட்ட காரியம் கைகூடும். |
| கன்னி | பிரயாண கஷ்டம், முயற்சி தாமதம், சத்துரு பயம், ரோகநிலை. |
| துலாம் | கலகம், கௌரவக்குறைவு, பிரயாண பயம், காரிய தாமதம். |
| விருச்சிகம் | எடுத்த கருமம் கைகூடும், தேகநலம், கீர்த்தி, நல்ல வருமானம். |
| தனுசு | மனமகிழ்ச்சி, சத்துருஜெயம், உடல் நலம், முயற்சி கைகூடும். |
| மகரம் | சிறு வியாதி, நண்பர்கள் விரோதம், வியாபார நன்மை, நல்ல முயற்சி. |
| கும்பம் | நண்பர்கள் சந்திப்பு, மனச்சோர்வு, காரிய தாமதம், உடல்நலக்குறைவு. |
| மீனம் | பிரயாண நன்மை, அந்நியர் சந்திப்பு, தொழில் விருத்தி, உறவினர் உதவி. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

**- வளவன்**

## ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் சாதன உருவாக்கப் போட்டி

ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் வாண்மையை உயர்த்தும் நோக்குடனும் மாணவர்களுக்கு மகிழ்ச்சிகரமான கற்றலுக்கான கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்தும் நோக்குடனும் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் கற்பித்தல் சாதன உருவாக்கல் போட்டி எதிர்வரும் 21 ஆம் திகதி நடாத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சேவையாற்றும் அனைத்து ஆரம்பக்கல்வி ஆசிரியர்களும் இப்போட்டியில பங்குபற்றலாம். ஒரு போட்டியாளர் எத்தனை கற்பித்தல் சாதனங்களையும் போட்டிக்கு சமர்ப்பிக்க முடியும். இது தொடர்பான மேலதிக விபரங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் தெரிவித்துள்ளார். பங்குகொள்ள விரும்புபவர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. போட்டியில் பங்குபற்றுபவர்களுக்கு பெறுமதிவாய்ந்த பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (ற)

## தோட்டப் பாடசாலைகளுக்கு ஆசிரியர் நியமனம்

தோட்டப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் நிலவும ஆசிரியர் பற்றாக்குறைகளுக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்றவர்களும், தேசிய கல்வியியற் கல்லூரியில பயிற்சிபெற்ற ஆசிரியர்களுமான 3ஆயிரத்து 200 பேரை தோட்டப் பாடசாலைகளில் செயலாற்றுவதற்கு சேவையில் சேர்த்துக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. 830 தமிழ்ப் பாடசாலைகளிலும் மற்றும் மத்திய ஊவா சப்ரகமுவ, தென்மாகாணங்களிலுள்ள ஏனைய பல பாடசாலைகளுக்கும், இந்தப் புதிய நியமனங்கள் வழங்கப்படும் என்று கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்தமாதம் இடம்பெறவுள்ள போட்டிப்பரீட்சையில சேர்க்கப்படவிருக்கும் இந்த ஆசிரியர்களுக்கு இவ்வருட முடிவிற்குள் நியமனம் வழங்கப்படும் என கல்வியமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (அ-9)

# வேலைவாய்ப்புப் பெற்று வெளிநாடு சென்று திரும்புவோர் போலிகளிடம் ஏமாறவேண்டாம்

## வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் எச்சரிக்கை

(கொழும்பு)

வேலைவரய்ப்புப் பெற்று வெளிநாடு சென்று நாடு திரும்புபவர்களை ஏமாற்றி பணமோசடி செய்யும் நபர்கள் தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளது என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

பணியகத்தினால் வழங்கப்படுகின்ற அடையாள அட்டை போன்ற போலியான அடையாள அட்டையுடன் இவர்கள் விமான நிலையப் பகுதிகளில் நடமாடுவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடு சென்று திரும்புபவர்களிடம் தம்மை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் அதிகாரிகள் என்று அறிமுகம் செய்து இந்த ஏமாற்று நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

இவர்கள் பணியகத்தின் மூலம் பல்வேறு உதவிகளைப் பெற்றுத் தருவதாகக் கூறி பணமோசடி செய்வதாகவும், நலன்புரி உதவிகள் ஓய்வூதியக் கொடுப்பனவு, அதிஷ்டலாபசீட்டுக்கள் போன்றவற்றிற்கு நிதி சேகரிப்பதாகவும் பணியகத்திற்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்த செயற்பாடு சட்டவிரோதமானதும், மோசடியானதும் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதிசேகரிப்பதற்காக எந்தவொரு அமைப்புக்கோ, நபருக்கோ அனுமதி வழங்கவில்லை என்றும் அந்தப் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

இவ்வாறு மோசடிகளில் ஈடுபடுவோர் குறித்து உடனே இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு அறியத்தருமாறு அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. (அ-9)

# ஓய்வூதிய முரண்பாட்டை நீக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

(கண்டி)

அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்ற 4 இலட்சம் பேரைப் பாதித்துள்ள ஓய்வூதிய முரண்பாட்டை ஒக்டோபர் முதலாம் திகதிக்குள் நீக்குமாறு வற்புறுத்தும் வகையில் கண்டி புகையிரத நிலையத்திற்கு முன்னால் எதிர்வரும் 9 ஆம் திகதி பெரும் ஆர்ப்பாட்டமொன்றை நடத்துவதற்கு அகில இலங்கை அரச ஓய்வூதியம் பெறுவோரினது நாடளாவிய சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

இந்த முரண்பாட்டை நீக்குமாறு கேட்டிருந்தும், இதுவரை ஒரு தீர்வும் கிடைக்கவில்லை என்று மேற்படி சம்மேளனத்தின் செயலாளர் சாந்த லொகுபிட்டிய தெரிவித்துள்ளார்.

ஒக்டோபர் முதலாம் திகதிக்குள் ஓய்வூதிய முரண்பாட்டை நீக்குமாறு வற்புறுத்தும் வகையில் நாடு முழுவதும் கடும் ஆர்ப்பாட்டங்களை நடத்தப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-9)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் பெருவிளையாட்டு, மெய்வன்மைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை பி.ப.3.00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிப் பிரதான மண்டபத்தில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபரும், சங்கத் தலைவருமான ந.சிவகடாட்சம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாண மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவரும் இளைப்பாறிய மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருமான செல்வி தி.பெரியதம்பி, போட்டி இணைப்பாளரும் உதவிக் கல்விப்பணிப்பாளருமான வி.பாலசிங்கம், தமிழீழக் கல்விக்கழகத் துணைப் பொறுப்பாளர் அருண் மாஸ்டர் மற்றும் தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத் தலைவர் எஸ்.மயில்வாகனம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

பரிசளிப்பு விழாவினைத் தொடர்ந்து யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அபிவிருத்தி பற்றிக் கலந்துரையாடப்படவிருப்பதால் பாடசாலை அதிபர்கள், விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்கள், பயிற்றுநர்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.(ற)

# பல்துறைப் பேரறிஞர்

## மறைந்தார் மாண்பு

# பேராசிரியர் சிவஞானசுந்தரம் (நந்தி)

மயிலங்கூடலூர்
பி.நடராசன்



தமது வாழ்நாள் முழுவதும் சமூகத்தின் பல்துறை வளர்ச்சிக்கும் முழுமையாகச் செயற்பட்ட சமூகப் பேரறிஞருள் ஒருவர் நந்தி என்று எல்லோராலும் அழைக்கப்படுபவர் பேராசிரியர் செ.சிவஞான சுந்தரம் இணுவில் பகுதியில் செல்லத்துரை செல்லம்மா தம்பதியினரின் மகனாக 30.3.1928 இல் தோன்றினார்.

நந்தி இளமை முதலே ஆர்வமுள்ள கல்வியாளராகி வாழ்நாள் முழுதும் கற்றுப் பலருக்கும் வழிகாட்டியாக விளங்கினார். தாய்வழி பாட்டனார், சிறிய தந்தையாராகிய பேராசிரியர் வி.செல்வநாயகம், அ.மரியதாசன், எஸ்.ஏ.சாள்ஸ், கி.லஷ்மண ஐயர் ஆகியோர் நந்தியின் தமிழ் அறிவை வளர்த்தனர். எனினும் அறிவியல் துறையில் சிறப்புடன் கற்று கொழும்பு மருத்துவக் கல்லூரியின் பட்டதாரியாகி 1955 இல் மருத்துவப் பணியைத் தொடங்கிய நந்தி 1968 இல் லண்டன் மருத்துவப் பல்கலைக்கழக மாணவராகி 1971 இல் மருத்துவக் கலாநிதிப் பட்டம் பெற்றார். ஏற்கனவே 1965 முதல் 3 ஆண்டுகள் சமூக வைத்தியத்துறை விரிவுரையாளராகப் பணியாற்றியிருந்த அவர் 1971 இல் மீண்டும் பேராதனைப் பல்கலைக்கழகம் வந்து முதுநிலை மருத்துவ விரிவுரையாளராகவும் 1975 முதல் 1978 வரை இணைப்பேராசிரியராகவும் விளங்கினார். 1978 இல் துணைவேந்தர் வித்தியானந்தனின் பெருமுயற்சியால் யாழ்ப்பாணத்தில் மருத்துவபீடம் தொடங்கப்பட்டது.

பேராசிரியர் சு.வித்தியானந்தனும் நந்தியும் 1952 முதல் 1989 வரை நெருங்கிய தொடர்புடையவர்களாக இருந்தனர். 1979 இல் நந்தி யாழ்பல்கலைக்கழக சமூக வைத்தியப் பிரிவு பேராசிரியராகி 1988 இல் வாழ்நாள் மருத்துவப் பேராசிரியர் பதவி பெற்று அமரராகும் வரை (4.6.2005) தொடர்ந்தார்கள். இடையில் 1984 முதல் 1988 வரை மருத்துவத்துறை பீடாதிபதியாக இருந்த பெருமையும் நந்திக்கு உண்டு.

1961 முதல் 1965 வரை யாழ்.தாதிமார் பயிற்சிக் கல்லூரியிலும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையிலும் பகுதிநேர வைத்தியத் துறை விரிவுரையாளராகப் பணியாற்றிய அவர்கள் 1965 முதல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சமூக வைத்தியத்துறை விரிவுரையாளராகி 3 ஆண்டுகள் பணியாற்றிய பின்னரே லண்டன் மருத்துவப் பல்கலைகழகம் சென்று கலாநிதிப் பட்டங்கள் (DPH, Ph.D) பெற்றார்கள்.

1971 இல் மீண்டும் பேராதனைப் பல்கலைக்கழகம் வந்து முதுநிலை மருத்துவ விரிவுரையாளராகவும் 1975 முதல் 1978 வரை இணைப்பேராசிரியராகவும் தொடர்ந்து கற்பித்தார்கள்.

தமிழியல் துறையில் பேரறிஞராகவும் விரிவுரையாளராகவும் பேராசிரியராகவும் பணியாற்றிய திரு.சு.வித்தியானந்தன் 1976 இல யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரானார். 'நந்தி' மருத்துவ மாணவராக இருந்த காலம் முதல் 37 ஆண்டுகள் (1952-1989) வித்தியானந்தனுடன் நெருங்கிய தொடர்புடையவராக இருந்தார்.

1978 இல் யாழ்பல்கலைக்கழகத்தில் துணைவேந்தரின் பெருமுயற்சியால் மருத்துவ பீடம் தொடங்கப்பட்டது.

பொது மருத்துவராகப் பதவியேற்ற நந்தி பின் சிறப்பான குழந்தை வைத்தியராகவும், மகப்பேற்று வைத்தியராகவும் விளங்கிய தோடு புற்றுநோய் துறைபற்றி சிறப்பாக ஆய்வு முடிவு செய்து வெளியிட்ட இருந்த நிலையில் அவருக்கே அந்நோய் ஏற்பட்டு அமரரானார். ஈழத்தில் மட்டுமன்றி உலக நாடுகள் பலவும் அவர்களை போராற்றலை அறிந்து மருத்துவ ஆலோசகராக அழைத்து உதவி பெற்றன.

இந்தோனேசியா, பாங்கொக், பங்களாதேஷ், இங்கிலாந்து, சிங்கப்பூர், சுவிஸ் முதலிய பல இடங்களில் அவர்கள் மருத்துவப் பயிற்சிப் பட்டறைகள் கருத்தரங்குகளை நடத்திப் பெருதவி புரிந்தார்கள். ஜோர்தானியாவில் சுகாதார அமைச்சின் பாடவிதான ஆலோசகராகவும் உலக சுகாதார சபை சார்பில் மலேசிய சுகாதார அமைச்சின் ஆலோசகராகவும் பணியாற்றினார்.

1982 இல் சிரேஷ்ட மருத்துவப் புலமைப்பரிசு பெற்று 3 மாதங்கள் லண்டனிலுள்ள பன்னிரு மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவ ஆய்வில் ஈடுபட்டார். அரை நூற்றாண்டுக்கு மேலாக 1950-2005 மருத்துவத்துறையில் உலகளாவிய முறையில் நந்தி சிறப்புப் பணியாற்றிப் புகழ்பெற்றார்.

இளமைமுதலே தமிழில் ஆர்வமும் ஆற்றலும் கொண்டுவிளங்கிய சிவஞானசுந்தரம் முதலில் சிறுகதை எழுதத் தொடங்கினார். 2.03.1947 இல் ' சஞ்சலமும், சந்தோஷமும்' என்ற முதல் சிறுகதை வீரகேசரி வார இதழில் வெளிவந்தது. தொடர்ந்து ' வி.செ.சி.', 'பெனிசிலின்', 'மகன்', 'ஜெய்ஹிந்த் சாஸ்திரியார்' ஆகிய இயற் பெயரிலும் புனை பெயரிலும் 1956 வரை சிறுகதைகள் எழுதி வந்தார். தமக்கு ஒரு புனைபெயர் வழங்கும்படி தமிழகப் பேரறிஞர் சி.இராசகோபாலச் சாமியார் (ராஜாஜி) அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். அவர்கள், 'நந்தி' என்ற புனைபெயரை வழங்கி 9.06.1956 இல் கடிதம் எழுதினார். நந்தி என்ற புனைபெயரையே தமது ஆக்கங்களிலும், நூல்களிலும் அவர் பெருமளவு பயன்படுத்தினார் இதனால் நந்தி என்பதே தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதும் அறிந்த பெயராக நிலைத்தது.

நந்தி சிறுகதை, நாவல், நாடகம் ஆகிய துறைகளிலும் சிறுவரியல், ஆத்மீகம், மருத்துவம் முதலிய கட்டுரைத்துறைகளிலும் மிகுந்த ஈடுபாடும் ஆற்றலும் கொண்ட பல்துறை எழுத்தாளராகவும் 1947 முதல் 2005 வரை சிறப்புடன் விளங்கினார். பல்துறை எழுத்தாளர் எனினும் சிறுகதைத் துறையில் அவர் ஆற்றல் மிக்கவராக விளங்கினார். நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளை அவர் எழுதியுள்ளார்.

நந்தி 1966 ஆம் ஆண்டு சாந்தியைத் திருமணம் செய்து கொண்டார். இத் திருமணப் பரிசாக, நந்தியின் நீண்டகால (1959-2004) அன்பராகவும், நண்பராகவும் விளங்கிய சமகால (மறுமலர்ச்சிக் காலம்) மூத்த எழுத்தாளரான மூதறிஞர் சொக்கன் பன்னிரு சிறுகதைகளைத் தொகுத்து நந்தியின் 15 நண்பர்களுடன் இணைந்து செயற்பட்டு 12 சிறுகதைகளைத் தொகுத்து 'ஊர் நம்புமா' என்ற நூலை வெளியிட்டு அன்பளிப்பாக வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து 1984 'கண்களுக்கு அப்பால்... ' என்ற பன்னிரு சிறுகதைகளைக் கொண்ட இரண்டாவது தொகுப்பு நூல் தமிழகத்தில் வெளியிடப்பட்டது.

மூன்றாவது தொகுப்பாக இதனைத் தொடர்ந்து 1994 இல் தமிழகத்தில் நந்தியின் கதைகள் என்ற பதினொரு சிறுகதைகள் கொண்ட நூல் வெளிவந்தது.

தரிசனம் என்பது பன்னிரு சிறுகதைகள் கொண்ட நான்காவது நூலாக 2002 இல் குமரன் புத்தக இல்லத்தால் தமிழகத்தில் வெளியிடப்பட்டது.

மேலே கூறப்பட்ட நான்கு சிறுகதைத் தொகுப்புக்களிலுமுள்ள சிறந்த பன்னிரு கதைகளைத் தொகுத்து நல்லூர் பு, ரணி பதிப்பகம், நந்தியின் சிறந்த சிறுகதைகள் - 12 என்ற தொகுப்பு நூலாக 2005 இல் வெளியிட்டுள்ளது. 'ஊர்நம்புமா?', காப்பு, சம்பந்தப்பட்டவர்களுக்கு, கேள்விகள் உருவாகின்றன, பதுங்குகுழி, மீண்டும் கேள்விகள் உருவாகின்றன, ஒரு பாவாடைகொடியாகிறது, உணர்ச்சிகள், தரிசனம், அசுரனின் தலைகள், மருந்துக்கு அப்பால், பார்வைகள் ஆகிய நந்தியின் மிகச் சிறந்த கதைகள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன. பல்துறை எழுத்தாளர்களும், அறிஞர்களுமான பன்னிருவர் சேர்ந்து தந்தவற்றின் தொகுப்பு இதுவென பு, ரணிநயினை கி.கிருபானந்தா குறிப்பிட்டுள்ளமை இக் கதைகளின் சிறப்பை உறுதிசெய்யும். ' நந்தியின் கதை' (1994) தொகுப்பில் வெளியான 'கேள்விகள் உருவாகின்றன'(1986), 'பதுங்குகுழி' (1988) என்ற இரு கதைகளும் இத் தொகுப்பிலும் இடம் பெற்றுள்ளன.

இலங்கை பிரித்தானியரிடமிருந்து விடுதலைபெற்ற காலத்தில் உருவான சிறந்த தமிழ் எழுத்தாளர்கள் சிலர் பொதுவுடமைத் தேசிய வாதிகளாக விளங்கினர். எனினும் அரசுகளால் தமிழர் அழிப்பு நிகழ்ந்தபோது இவ் எழுத்தாளர்கள் பொதுவுடமைக் கோட்பாட்டை நிராகரிக்காமல் தமிழ்த் தேசியக் கோட்பாட்டை ஏற்பவர்களாக மாறினர். இவர்களுள் ஒருவர் நந்தி.

யாழ்ப்பாணத்தில் பிறந்து மலையகத்தில் சில காலம் பணியாற்றிய நந்தி தமிழரின் ஒருமைப்பாட்டையும் குறைபாடுகளற்ற பெருவாழ்வையும் விரும்பினார். அவருடைய காலத்தால் முந்திய இரு நாவல்களும் இக்ள கோட்பாட்டை வலியுறுத்துகின்றன. 1962 இல் தினகரன் இதழில் எழுதிய முதல் நாவல் மலையக மக்களின் துன்பம் நிறைந்த வாழ்வை அடிப்படையாகக் கொண்ட 'மலைக் கொழுந்து' ஆகும்.

இது 1964 இல் யாழ்ப்பாணத்திலும் 1982 இல் தமிழகத்திலும் வெளிவந்தது. இதுவே மலையகத் தோட்டத் தொழிலாளர் சமூகத்தின் பிரச்சினைகளைச் சித்திரித்த முதலாவது சிறந்த நாவல் என்பது பலரின் கருத்தாகும். அவரது இரண்டாவது நாவல் 'தங்கச்சி அம்மா'. முதலில் வீரகேசரி இதழில் வெளிவந்து. 1977இல் வீரகேசரி பதிப்பக நூலாகவும் வெளிவந்தது. மலையகப் பெண் ஒருவர் யாழ்ப்பாணக் கிராமச் சூழலில் மருத்துவப் பணிபுரியும் போது ஏற்படும் உணர்வுகளை இது விளக்குகின்றது. மலையகத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் பாலம் அமைப்பதும். தமிழ்த்தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதும் இவ்விரு நாவல்களினதும் நோக்காகும். 'நம்பிக்கைகள்' 1989 இல் வெளிவந்த மூன்றாவது நாவலாகும். இவ்விரண்டும் சிறந்த நாவல்களாகக் கருதப்படுகின்றன.

பல்துறை எழுத்தாளராக விளங்கிய நந்தி நாடக ஆசிரியராகவும் நடிகராகவும் விளங்கினார். 'குரங்குகள்'(1975) நாடக நூலாக வெளிவந்ததோடு. மேடை நாடகமாகவும் நடைபெற்றது. நந்தி பேராசிரியர் பாத்திரமாக நடித்தார். சுதந்திரன் இதழில் வந்த 'விசித்திர மூக்குக் கண்ணாடி' என்ற சிறுகதையே பின் குரங்குகள் நாடகமாக உருவானது என்ற கருத்தும் உள்ளது. வானொலியிலும் இவர் எழுதிய நாடகங்கள் பலவற்றிலும் பாத்திரமேற்று நடித்துள்ளார். 1976 இல் 'பொன்மணி' என்ற திரைப்படத்தில் பொன்மணியின் தந்தையாக நடித்தார். சிறுவர்களுக்காக 'உங்களைப் பற்றி' (1973). தம்பி. தங்கைக்கு ஆகிய இருநூல்களையும் நந்தி எழுதி வெளியிட்டுள்ளார். □

# யுத்தகாலத்தில் வீழ்ச்சியடையாத எம்கல்வி சீரழிவதை தடுத்து எழுச்சிபெறச்செய்வோம்

## கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன்

வீழ்ச்சியடைந்து வரும் யாழ். குடாநாட்டின் கல்வியை எழுச்சி பெறச் செய்யவேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும். இது யாழ்.குடா நாட்டுக்கு மட்டுமல்ல வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கும் பொருந்தும். ஆசிரியர்களின் பணி தேடிக்கற்றுப் பின் தேடியதைப் பிள்ளைகளுக்குக் கற்பிப்பதேயாகும்.

ஆனால் மாறாக இன்று வகுப்புக்களுக்குரிய பாடநூல்கள் இதுவரை வந்து சேரவில்லை. நாம் எதை எப்படிக் கற்பிப்பது என்று கூறிக்கொண்டே காலத்தைக் கடத்தி வருகின்றமை மாணவர்களின் கற்றலில் பாரியதாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது.

இது எமது சமூகத்துக்கு பேரினவாதத்தை விட தாக்கத்தை ஏற்படுத்தலாம் என யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரியின் படாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன், அச்சுவேலி மத்திய கல்லூரியின் ஆரம்பப்பிரிவு சுவரோவியத்திறப்பு விழா மற்றும் முத்தமிழ் விழா நிகழ்வில் பிரதமவிருந்தினர் உரையில் தெரிவித்தார்.

கல்லூரி முதல்வர் வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் ஆசிரியர்கள் வேதனத்தை மட்டும் கருத்திற்கொள்ளாது தியாகத்துடனும் அர்ப்பணிப்புடனும் தமது பணியை நேசித்து களமிறங்குவதன் ஊடாகவே கல்வி உலகில் பல சாதனைகளை நிலைநாட்ட முடியும்.கடந்த சில தசாப்தங்களாக யுத்தத்துடன் பழக்கப்பட்டதாகவும் யுத்தத்துடன் ஒன்றித்தும் எமது சமூகம் வந்துள்ளது.

ஆனால் அக்காலத்தில் எமது கல்வித்தரம் வீழ்ச்சியடையவில்லை இடம் பெயர்ந்த வேளைகளில் கல்வியையும் அதன் மீதுள்ள பற்றையும் ஆர்வத்தையும் சுமந்தே சென்றோம். சென்ற இடம் எல்லாம் கற்றோம். வசதிகள் குறைந்த நிலையிலும் எமது கல்வியை கைவிடவில்லை அதனால் எமது கல்வித்தரம் வீழ்ச்சியடைய வில்லை.

இன்று பேரினவாதம் மட்டும் அன்றி வேறுபல புறக்காரணிகளும் கல்வியில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.இதில் தொலைக்காட்சி முக்கியம் பெறுகின்றது. இன்று எல்லோராலும் பேசப்பட்டு வருகின்ற ஒன்று இதன் மோகத்தை குறைக்க பெற்றோர்கள் தயார் இல்லை.

எனவே பெற்றோர்களிடையே ஏற்படும் மனமாற்றமே இப்பிரச்சினைக்குரிய தீர்வாகும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. எமது மாணவர்களின் கல்வியை சீரழிப்பதில் தரப்படுத்தல்,பேரினவாதம் என்பவற்றுக்கு மேலாக ஓங்கிநிற்கும் கலாசார சீரழிவுகளையும் தொலைக்காட்சிகளின் மோகத்தையும் கட்டுப்படுத்தி எமது சமூகத்தின் கல்வியை மேலோங்கச்செய்து கல்வித்தர வீழ்ச்சியை எழுச்சிபெறச் செய்வதற்கு ஆவன செய்வோம் என்றார். (அ-79)

# வவுனியா அரசியல்துறையினருடன் பள்ளிவாசல் நிர்வாகம் சந்திப்பு

## இருதரப்பு விடயங்கள் குறித்தும் ஆராய்வு

(வவுனியா)

வவுனியா அரசியல்துறையினருக்கும் வவுனியா பள்ளிவாசல் நிர்வாகக் குழுவினருக்கும் இடையில் முதன்முறையாக சந்திப்பு ஒன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது.

இந்தச்சந்திப்பில் பல முக்கிய விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டதாக வவுனியா அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவிலுள்ள முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டதாகவும்,வவுனியாவில் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் தொடர்பாகவும், தமிழ் பேசும் சமூகம் என்ற வகையில் முஸ்லிம்களும் பங்கு கொள்வது தொடர்பாகவும் இச் சந்திப்பில் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

தமிழ் மக்கள் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளவிருக்கும் அனைத்துப் போராட்டங்களிலும் முஸ்லிம் சமூகத்தினரும் பங்கு பெறுவார்கள் என்றும் இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்துவதற்கு விடுதலைப்புலிகளும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பது தொடர்பாகவும் இணக்கம் காணப்பட்டிருப்பதாக வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் மேலும் தெரிவித்துள்ளார். (ரு-2)

# ஊர்காவற்றுறைக்கு புதிய பங்குத்தந்தை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைக்கு புதிய பங்குத்தந்தையாக அருட்திரு எக்ஸ். டபிள்யூ.ஜேமிஸ் அடிகள் முழங்காவில் பங்கில் இருந்து இடம் மாற்றம் பெற்று வந்துள்ளார்.

இங்கு முன்பு கடமையாற்றிய பங்குத்தந்தை அருட்திரு அன்ரனி ஞானப்பிரகாச அடிகள் இரணைப்பாலை பங்குக்கு இம்மாதம் 1ஆம் திகதி முதல் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். (அ)

# தாச்சிப் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் மற்றும் விளையாட்டுத்துறை என்பனவற்றின் அனுசரணையுடன் கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில இன்று திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு இணுவில் கலாஜோதி அணியை எதிர்த்து சுதுமலை புவனேஸ்வரியம்பாள் அணி மோதவுள்ளது. (ற)

# வானுடன் கடத்தப்பட்ட சாரதி சடலமாக மீட்கப்பட்டார்

## தலவாக்கலையில் சம்பவம்

(மாத்தளை)

தலவாக்கலையில் இருந்து வான் ஒன்றை சாரதியுடன் கடத்திய கொள்ளையர் பின்னர் அந்தச் சாரதியை கொலைசெய்து பஹலயட்டவள என்ற இடத்தில் உடலைத்தள்ளிவிட்டுசென்றுள்ளதாக வத்தேகமப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் வத்தேஹம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.நிவாவைக்குக் கிடைத்த தகவலை அடுத்து கொலைசெய்யப்பட்டவரின் உடல் மாத்தளை வத்தேகம வீதியில் உள்ள பஹலயட்டவள என்ற இடத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

அதேவேளை மது போதையில் இருந்த பத்மசிறி என்பவரை இச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டதாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்துள்ளதாக தெரிவித்துள்ள பொறுப்பதிகாரி 8பேர் கொண்ட கோஷ்டியினர் இந்தக்கொலையுடன் தொடர்புபட்டிருக்கலாம் என்று சந்தேகிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை வத்தேகம பேருந்து நிலையத்தில் அநாதரவாக கைவிடப்பட்டிருந்த பொதி ஒன்றை வத்தேகம பொலிஸார் மீட்டெடுத்துள்ளனர்.

அந்தப் பொதியில் இருந்து 2அடி உயரமுள்ள தங்கமுலாம் பூசப்பட்ட பளிங்கிலான புத்தர் சிலை ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிஸார் இரவு ரோந்து சென்ற வேளை பொலிஸாரைக் கண்ட கொள்ளையர்கள் இதனைக் கைவிட்டுச்சென்றிருக்கலாம் என்று கருதப்படுனிற்னது.

மேலதிக விசாரணைகளை வத்தேகம பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ரு-2)

## இன்று ஒரு தகவல்

# இரக்கமும் ஏமாற்றமும்

"இரக்கப்படு ஆனால் ஏமாந்துவிடாதே" என்று புத்திமதி சொல்வது உண்டு. நம்மில் பலபேர் அதிகமாக இரக்கம் காட்டி அதனாலேயே ஏமாந்துபோய் விடுகிறோம். நாம் மட்டுமல்ல அந்தக் காலத்திலேயே கூட இரக்கப்பட்டு ஏமாந்து போனவர்கள் பலபேர் உண்டு.அதற்கு ஏகப்பட்ட கதைகளைச் சொல்கிறார்கள் ஆன்மிகப் பேச்சாளர்கள் .அதில் ஒரு கதையை இப்போது உங்களுக்குச் சொல்லலாம் என்று ஒரு ஆசை.

ஒரு காட்டில் ஒரு முனிவர் இருந்தார். அந்தக் காலத்தில் முனிவர்கள் எல்லாம் காட்டில் தான் இருந்தனர். அதனால் இந்த முனிவர் காட்டில் ஒரு ஆச்சிரமம் அமைத்துக்கொண்டு அங்கே உட்கார்ந்திருந்தார். மிகவும் இரக்க சுபாவம் உள்ளவர்.அந்தக் காட்டில் அவருக்குத் துணையாக இருந்தது ஒரு நாய் எப்போதும் அவரையே சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்தது.

ஒருநாள் அந்த நாய் ஆச்சிரமத்திலுள்ள ஒரு மூலையில் அமர்ந்து அழுது கொண்டிருந்தது. முனிவர் அதைப் பார்த்தார். மனம் மிகவும் இளகிவிட்டது. அந்த நாயைக் கூப்பிட்டார். அதுவும் அருகில் வந்து நின்றது. "ஏன் அழுகிறாய்?" என்றார் இவர். "எனக்கு இந்தக் காட்டில் வாழ்வதற்குப் பயமாக இருக்கிறது" என்றது நாய். "நான் இருக்கும் போது உனக்கென்ன பயம்?" என்றார்.

"நீங்கள் எப்போதுமே என் பக்கத்தில் இருப்பதில்லை... சில சமயம் நான் காட்டில் இப்படி அங்கேயும் இங்கேயும் தனியாகப் போய்வந்து கொண்டிருப்பேன்.அந்தக் காட்டிற்குள்ளே நிறைய நரிகள் உள்ளன. எந்தநேரம் என் மீது பாய்ந்து கடித்து விடுமோ என்று பயமாக இருக்கிறது" என்றது. "கவலைப்படாதே! என்னிடம் மந்திரசக்தி உள்ளது. அதை உபயோகப்படுத்தி உன்னையே நரியாக மாற்றிவிடுவேன்" என்றார். அதேபோல் ஒரு மந்திரத்தைச் சொன்னார். அந்த நாய் உடனே நரியாக மாறிவிட்டது."இனிமேல் கவலைப்படாதே! இங்கே உள்ள மற்ற நரிகள் கூட உன்னைப் பார்த்தால் பயப்படும்" என்றார்.

அப்படியே கொஞ்சநாள் ஓடியது. மறுபடியும் ஒருநாள் நரி உருவத்தில் இருந்த இந்த நாய் அழுதது. "மறுபடியும் ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார் முனிவர். "இந்தக் காட்டில் நிறைய சிறுத்தைகள் உள்ளன. அதைப்பார்க்கும் போதெல்லாம் எனக்குப் பயமாக இருக்கிறது. எந்த நேரத்தில் என்ன ஆகுமோ?" என்றது நரி. "அப்படியா? சரி! கவலைப்படாதே உன்னையும் ஒரு சிறுத்தையாக மாற்றி விடுகிறேன். மற்ற சிறுத்தைகள் உன்னைப் பார்த்துப் பயப்படும்படி செய்கிறேன்" என்றார். அதேபோல் செய்தும் விட்டார்.

சில காலம் சென்றது. சிறுத்தை உருவத்தில் இருந்த அந்த நாய் மறுபடியும் அழ ஆரம்பித்தது. "என்ன காரணம்?" என்று விசாரித்தார். இந்தக் காட்டில் நிறைய சிங்கங்கள் உள்ளன. அதனால் எனக்கு ஏதாவது ஆபத்து வந்துவிடுமோ என்று பயமாக இருக்கிறது" என்றது. முனிவர் பார்த்தார். "சரி... உன்னையும் ஒரு பெரிய சிங்கமாக மாற்றிவிடுகிறேன்" என்றார்.

இவ்வாறே மாற்றிவிட்டு "நீ இப்போது இந்தக் காட்டிற்கே ராஜா" என்றார். சிங்கமாக இருந்த நாய் யோசிக்க ஆரம்பித்து விட்டது. உடனே அந்த முனிவர் மீது பாய்ந்து கடிப்பதற்கு வந்தது. "என்ன இது என்னையே கடிக்க வருகிறாய்?" என்றார். "நீ எனனை விடப் பெரிய சிங்கமாக வேறு யாரையாவது மாற்றி விடக்கூடாது அல்லவா? அதனால் உன்னை உயிரோடு விட்டு வைத்தால் ஆபத்து" என்று சொல்லிக்கொண்டே அருகில் வந்தது.

"ஆகா! இரக்கம் காட்டி ஏமாந்துவிட்டோம்" என்பது அப்போது தான் முனிவருக்கு விளங்க ஆரம்பித்தது. உடனே சாமர்த்தியமாக ஒரு காரியம் செய்தார். உடனே ஒரு மந்திரம் சொன்னார். அந்த சிங்கம் மறுபடியும் பழையபடி நாயாக மாறிவிட்டது. வேறு வழியிலலாமல் அவர் காலையே மறுபடியும் சுற்றிவர ஆரம்பித்து விட்டது. இரக்கம் காட்டலாம் ஆனால் ஏமாந்து போய்விடக்கூடாது என்பது தான் நான் இதில் இருந்து தெரிந்து கொள்ள வேண்டியது. இந்தக் காலத்தில் அதே மாதிரி ஒரு முனிவரும் நாயும் இருப்பதாக வைத்துக்கொள்ளுங்களேன் சும்மா ஒரு கற்பனை தான்.

நாம் அங்கே போகிறோம். அந்த நாயை தனியாகக் கூப்பிடுகிறோம். அது எழுந்து அருகில் வந்ததும் தனியே சென்று ஒரு மரத்தடியில் நின்றுகொண்டு அதற்குப் புத்திமதி கூறுகிறோம். "இதோ பார் நாயே! எவ்வளவு நாள்தான் இப்படி அவரிடம் வாலாட்டிக் கொண்டு நிற்பாய்? இந்தக் கதையில் வரும் நாய் மாதிரி ஏமாந்து போகாமல் நீ கொஞ்சம் சாமர்த்தியமாக நடந்து கொண்டால் நல்ல படியாக வாழலாம்"என்கிறோம்.

"என்ன செய்யலாம் சொல்லுங்கள்" என்கிறது அந்த நாய். "அந்த நாய் மாதிரி முனிவரிடம் என்னை நரியாக மாற்று. சிங்கமாக மாற்று என்று கேட்டுக் கொண்டிருக்காதே.எனக்கு வேண்டுமானதை நானே தேடிக்கொள்கிறேன். கொஞ்ச நேரத்திற்கு உங்கள் மந்திரசக்தியை மட்டும் எனக்கு தானமாகக் கொடுங்கள் என்று கேள். இரக்கப்பட்டு கொடுப்பார். உடனே நீ அந்த மந்திரசக்தியை உபயோகப்படுத்தி அவரை நாயாகவும் உன்னை முனிவராகவும் மாற்றிக்கொள். அதன்பின் உன்னை யாரும் எதுவும் செய்யமுடியாது" என்று யோசனை சொல்லிக் கொடுக்கிறோம்.

அதற்கு அந்த நாய் "நல்ல யோசனை தான். இதே யோசனை ஏற்கனவே இன்னொரு நாய்க்கு வந்துவிட்டது. அதனால்தான் அந்த நாய் இப்போது முனிவராக உட்கார்ந்து இருக்கிறது. முனிவராக இருந்த நான் நாயாக மாறி அவரைச் சுற்றிக் கொண்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல நீங்கள் கூட என்னைக் கூப்பிட்டு புத்திமதி கூறும் அளவுக்கு நிலைமை ஆகிவிட்டது" என்கிறது.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# சமாதானப் பேச்சை மீண்டும் ஆரம்பிப்பது அரசின் நம்பகத்தன்மையைப் பொறுத்தது

## பத்மினி சிதம்பரநாதன் எம்.பி.

(யாழ்ப்பாணம்)

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் கைச்சாத்திட்டு ஏற்படுத்தியுள்ள பொதுக்கட்டமைப்பு சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஒரு படிக்கல்லாக அமையலாம். அது அரசாங்கம் நம்பிக்கையாக நடக்குமா என்பதை பொறுத்தே சாத்தியமாகும்.

இவ்வாறு குறிப்பிட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி.பத்மினி சிதம்பரநாதன்.

தீவகத்தில் நடைபெற்ற பேரணியில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், எங்களுடைய போராட்டம் எங்களுடைய உரிமைக்கான போராட்டமாக ஐம்பது வருடங்களுக்கு முன்பிருந்து இற்றை வரைக்கும் அதே கோரிக்கைக்கான போராட்டமாக இருக்கின்றது. ஒரு போதுமே நாங்கள் உரிமையை விட்டு சலுகைக்காக மாறியதில்லை. அந்த உாிமைப்போராட்டத்தில் முதலில் நாம் சாத்வீக வழியைத் கடைப்பிடித்தோம். இந்த சாத்வீகப் போராட்டம் ஆயுத ரீதியாக தடுக்கப்பட்ட தன் விளைவாக நாங்கள் ஆயுதப்போராட்டத்தை முன்னெடுத்தோம். சாத்வீகப் போராட்டத்தால் எங்களுக்கு பெரிய விளைவுகள் கிடைக்காவிட்டாலும் ஆயுதப்போராட்டத்தால் பெரிய வெற்றிகளைக் கண்டுள்ளோம்.

இவற்றினால் தமிழர் தாயகத்தில் ஒரு நடைமுறை அரசு உருவாகியிருக்கின்றது. ஒரு நிர்வாகம் இருக்கின்றது,ஒரு காவல்துறை இருக்கின்றது. எங்களுக்கென்று ஒரு மனித உரிமை அமைப்பு இருக்கின்றது.ஒரு அரசுக்கு என்னென்ன கட்டமைப்புக்கள் தேவையோ அவையெல்லாம் கொண்டதாக ஒரு நடைமுறை அரசு உருவாகியுள்ளது.இந்த நிலை உருவானது ஆயுதப்போராட்டத்தின் விளைவாகத்தான் அதனூடாக கிடைத்த வெற்றிகள் தான் இந்த வகையில் நாங்கள் இவற்றினைப் பெற்று 70 வீத நிலப்பரப்பை விடுதலைப்புலிகள் தங்களுடைய கட்டுப்பாட்டில் நிர்வாகம் நடத்துகின்ற நிலையில் தான் வெளிநாடுகளும் எங்களை அங்கரித்து, எங்களுடைய குரலை அவர்கள் கேட்கத்தொடங்கினார்கள். அதன் பலனாக பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டு 2002ஆம் ஆண்டு புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன அதன் ஊடாக சிரான் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. சிரான் அமைப்பிற்கு நடந்தது என்ன?

அதன் பிறகு இன்றைக்கு பொதுக்கட்டமைப்பு என்ற பெயரில் கையெழுத்து வைத்திருக்கிறோம் இந்த நிலைக்கு நாங்கள் போகவேண்டி வந்ததன் காரணம் இராணுவ ரீதியில் பாதிக்கப்பட்ட அதே மக்களே இந்த சுனாமிப் பாதிப்பாலும் மிகவும் பாதிக்கப் பட்டனர். அந்த வேளையில் அவர்களுக்கு நிவாரணம் வழுங்கவேணடி ஏற்பட்டதால் பொதுக்கட்டமைப்பு தேவை என்று நாங்கள் வெளிநாடுகள், தூதுவராலயங்கள் எல்லாம் சென்று விளங்கப்படுத்தினோம் அரசிடம் எந்தவிதமான நம்பிக்கையும் எங்களுக்கு இல்லை இந்த அரசின் ஊடாக இந்த சுனாமி நிவாரணம் மக்களைச் சென்றடையாது.

ஆகவே, வேறு வழிகள் மூலம் அந்த உதவிகளை கிடைக்கச் செய்யும் படி கூறி வந்த வேளையில் தான் வெளிநாட்டுத்தூதுவராலயங்களும் அதை உணர்ந்துகொண்டன. அதன் விளைவாகத்தான் இன்று பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அந்த பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டாலும் கூட அது எவ்வாறு நடைமுறையில் வரப்போகின்றது என்பதை பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.எங்களுடைய வரலாறு தொடர்ந்து கையெழுத்திடுவதும் அது கிளிக்கப்படுவதும் பின் அது கைவிடப்படுவதும் தானே.

அந்த வகையில் நாங்கள் இதையும் விழிப்புடன அவதானிக்க வேண்டும். இதில் அரசியல் ரீதியாக நாங்கள் இன்னும் கூர்மைப்படவேண்டியுள்ளது. பொதுமக்கள் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டிய காலம் சிரானுக்கு நடந்தது இந்த பொதுக்கட்டமைப்புக்கும் நடக்காமல் விழிப்போடு இருக்கவேண்டும். பொதுக்கட்டமைப்பின் ஊடாக ஒரு முக்கியமான விடயத்தை உணரலாம். இலங்கையின் இரண்டு நிர்வாகங்கள் இருக்கின்றன. என்பதை வெளிநாடுகள் ஏற்றுக் கொண்டிருககின்றன.

அந்த வகையில் தான் எங்களுக்குரிய கொடுப்பனவுகள் எல்லாம் விடுதலைப்புலிகளினூடு வருவதற்கான ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டமைப்பைச் செய்ய வல்லவர்கள் விடுதலைப புலிகள் தான் என்பதையும் இது காட்டியிருக்கின்றது. இவை இரண்டும் பொதுக்கட்டமைப்பின் ஊடாக கிடைத்த பெறுமதியான செய்திகள்

தமிழர்களுடைய உரிமைகளை பொறுத்தவரையில் பொதுக்கட்டமைப்பு என்பது ஒரு சிறுதுளி. நாங்கள் பெறவேண்டிய உரிமை மிகப்பெரியது. இன்றைக்கு எங்களுடைய கோரிக்கைகளை வலி யுறுத்தி இங்கு கூடியிருக்கின்றோம். பொதுக்கட்டமைப்பு பேச்சுவார்தைக்கு ஒரு படிக்கல்லாக அமையலாம். இடைநிறுத்தப்பட்ட பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கும் அதன் ஊடாக ஒரு பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்தி பேச்சுவார்த்தையைக்கொண்டு செல்வதற்கும் ஒரு படிக்கல்லாக அது அமையலாம். அது அரசு நம்பிக்கையாக நடக்குமா என்பதை பொறுத்தது.

ஆனால் நாங்கள் அரசியல் ரீதியாக கூர்மையாகவும், விழிப்பாகவும் இருக்கவேண்டும். அடிக்கடி எங்கள் குரலை உயர்த்தி எங்களுடைய வீடுகள், பள்ளிக்கூடங்கள்,கடற்றொழில் எல்லாவற்றையும் மீண்டும் பெறும் அந்த இயல்பு வாழ்கையை விரைவில் பெறவேண்டும் என்பதற்காக தொடர்ந்து போராட வேண்டும். இனறைக்கு தமிழீழம் எங்கும் பல போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. தமிழீழம் எங்கும் நாங்கள் எழுச்சிபூர்வமாக இருந்து எங்களின் உரிமையை பெறுவதற்காக செயற்படவேண்டும் என்றார். (ற)

# நிலையான மின் கட்டணம் அதிகரிப்பு மக்கள் கருத்தறிய நடவடிக்கை

(கொழும்பு)

நிலையான மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் தொடர்பாக மக்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வாறு முன் வைக்கப்படும் கருத்துக்களை நடைமுறையில் உள்ள சட்ட நிலைமையை கருத்தில் கொண்டு அவற்றில் சிக்கல் நிலை காணப்படாவிட்டால் அந்த நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும் என மின்சார சபையின் பொதுமுகாமையாளர் ரஞ்சித் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் நிலையான மின் கட்டணத்தை அதிகரிக்க முடியும் என நம்புவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# சுனாமியால் பெற்றோரை இழந்த இடம்பெயர்ந்த சிறுவர் நலம்பேண நீதியமைச்சர் நடவடிக்கை

(கொழும்பு)

சுனாமிப் பேரலையினால் இடம்பெயர்ந்த சிறுவர்களின் நலன்களை கவனிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இதனை முன்னிட்டு இடம்பெயர்ந்த சிறுவர்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 18வயதிற்கு குறைந்தவர்களின் பாதுகாவலர்களை பதிவு செய்வதற்கும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பாதுகாவலர்கள் நன்னடத்தை மற்றும் சிறுவர்கள் பாதுகாப்புச் சேவைத் திணைக்களத்தில் எதிர்வரும்31ஆம திகதிக்கு முன்னர் தமது பூரண விபரங்களுடன பதிவு செய்யவேண்டும் என்று கோரப்பட்டுள்ளன.

பெற்றோர் இருவரையும் அல்லது அவர்களில ஒருவரை இழந்த சிறுவர்களை பொறுப்பேற்றுள்ள அனைதது ஸ்தாபனங்களும் அமைப்புக்களும் அல்லது உறவினாகளும் இவ்வாறு பதிவு செய்ய வேண்டும் என்று நீதி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, சுனாமி விசேட ஒழுங்குகள் சட்ட மூலத்தின் 16 சரத்திற்கு அமைய சிறுவர் பதிவு இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-9)

# பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

யாழ். மறைமாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் தேசிய சமாதானப் பேரவையின் செயற்திட்டத்தின் கீழ் இரண்டு நாள் பயிற்சிப்பட்டறை ஒன்றை நடாத்தவுள்ளது.

யாழ.வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை 8.30 மணிதொடக்கம் 9ஆம் திகதி ச்னிக்கிழமை பி.ப3.30 மணி வரை நடைபெறவுள்ள இப் பயிற்சியின் போது முரண்பாடுகளின் பகுப்பாயவு,பொதுவான முரண்பாடுகள், எழுத்து மூலமான முரண்பாடுகளின் பகுப்பாய்வு, இலங்கை இனப்பிரச்சினைகளின் சரித்திர ரீதியான பின்னணி போன்ற விடயங்கள் பற்றி ஆராயப்படவுள்ளன.

இப்பயிற்சியினை பல்கலைக்கழக அரச அறிவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கே. ரி. கணேசலிங்கம்,சமூகவியல்துறை விரிவுரையாளர் டொறீன் அருளானந்தம் ஆகியோர் நெறிப்படுத்தவுள்ளார்கள்.

பதிவுகளை 6ஆம் திகதிக்கு முன் மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-7)

# மஹோற்சவம்

(பொன்னாலை)

வட்டுக்கோட்டை- தெக்கணபாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவிருக்கும் திருவிழாவில் எதிர்வரும் 8ஆம் திகதி மாலை சப்பறத் திருவிழாவும்,11ஆம் திகதி மாலை 7.30 மணிக்கு வேட்டைத்திருவிழாவும், 12ஆம் திகதி பி.ப.2.45 மணிக்கு இரதோற்சவத் திருவிழாவும்,மறுநாள் 13ஆம் திகதி மு.ப.11.45 மணிக்கு தீர்த்தோற்சவத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (அ-49)

# கத்தோலிக்க தேவாலயங்களை புனரமைக்க 40 இலட்சம் ரூபா

வடக்கு-கிழக்கில் யுத்தத்தினால் சேதமடைந்த கத்தோலிக்க தேவாலயங்களைப் புனரமைப்புச் செய்வதற்கென அரசாங்கம் 40 இலட்சம் ரூபாவை செலவிட இருக்கின்றது.

பூநகரி,மன்னார்,வவுனியா, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உள்ள சேதமடைந்த கத்தோலிக்க தேவாலயங்களைப் புனர்நிர்மாணம் செய்யும் திட்டத்திற்கு அந்தந்தப் பகுதி மாவட்ட செயலாளர்களும்,பிரதேச செயலாளர்களும் பொறுப்பாக இருப்பார்கள் என்று கிறிஸதவ பாராளுமனற விவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-9)

# தமிழகப் பயணம்

## பத்திரிகையாளர்கள் எழுந்து நிற்பது தவறா?

பயணக் கட்டுரை

28 ஒருமுறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடந்த பட்டமளிப்புவிழாவைப் பார்ப்பதற்காக நானும் சென்றிருந்தேன்.

பட்டமளிப்பிற்காகத் துணைவேந்தரை அழைத்து வந்த போது கைலாசபதி அரங்கின் முன்வரிசையில் இருந்த, நீதிபதி ஒருவரும் எழுந்து நின்று மரியாதை செய்தார். எவ்வளவு உயர்ந்த பண்பு.

இந்த நினைவுகள் என் உள்ளத்திரையில் ஓடிக்கொண்டிருந்தன. துணைவேந்தரை அழைத்து வந்த போது நீதிபதி எழுந்து நின்றமை துணைவேந்தருக்குச் செலுத்திய தனிப்பட்ட மரியாதையன்று. அது கல்விக்குக் கொடுக்கும் மதிப்பு. 'மன்னரிற் கற்றோன் சிறப்புடையன்' என்ற வாக்கின் நிஜப்பாடு அது.

இந்த உயரிய பண்பிற்கு சவீதா பல்கலைக்கழகத்தில் ஊடகவியலாளர் ஊறுவிளைவித்து விட்டார்களோ என்ற ஏக்கத்தோடு நிகழ்வுகளை நோக்கினேன்.

அழைத்துவரப்பட்ட வேந்தர், துணைவேந்தர் ஆகியோர் அரங்கின் முன்வரிசையில் அமர்ந்து கொண்டனர்.

அவர்களோடு ஒத்தாற்போல் மரியாதையின் நிமித்தம் எழுந்து நின்றவர்களும் அமர்ந்து கொள்ள... 'இப்போது வரவேற்பு நடனம் இடம் பெறும்' என்ற அறிவிப்பை ஒலிபெருக்கி ஊதியது.

பட்டமளிப்பு விழாவில் வரவேற்பு நடனம் என்ற அறிவித்தல் எனக்கு ஆச்சரியமாக இருந்தாலும், தமிழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பை அவதானிக்க வேண்டுமென்ற நினைப்போடு என்னைத் தயார்ப்படுத்திக்கொண்டேன்.

அரங்கத்திரை நல்லூர் முருகன் கோவில் வசந்தமண்டபத் திரைபோல் விலகிக் கொள்ள, சிறுமிகளின் வரவேற்பு நடனம் ஆரம்பமாகியது. அரங்கின் மையத்தில் பிள்ளையார் சிலை.

நாட்டியமாடிய சிறுமிகள் கைகளில் வைத்திருந்த மலர்களை விநாயகனின் பாதங்களில் சூடி வணங்கினர்.

வழமையில் நடராஜர் சிலை வைத்து மலர் சூடுவதே பரதநாட்டிய மரபெனினும் சவீதா பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் விநாயகனுக்கே மலர் சூடப்பட்டது.

வித்தைகளுக்கெல்லாம் தலைவனாக இருக்கக் கூடிய விநாயகனை வணங்குவது, சமய பேதங்களையும் நீக்கக் கூடியதென்பதால் அத்தகையதொரு நடைமுறையை அவர்கள் பின்பற்றியிருக்கலாம் என நினைத்துக் கொண்டேன்.

வரவேற்பு நடனத்தையடுத்து பேராசிரியர்கள் அரங்கில் ஏறி அமர்ந்து கொண்டனர். தலைவர், பிரதம விருந்தினர், சிறப்புவிருந்தினர் என்ற கௌரவங்கள் பட்டமளிப்பு விழா மேடையிலும் வழங்கப்பட்டிருந்தன. சவீதா பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் வீரையன் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் போராசியர் குழந்தைசாமி, தமிழ் நாடு பரீட்சைக் குழுத்தலைவர் திரு. இராஜசேகரன், திருமதி. சரஸ்வதி வீரையன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் அழைக்கப்பட்டிருந்தனர்.

துணைவேந்தர் பேராசிரியர் இராஜகோபால் வரவேற்புரை நிகழ்த்த, ஏனையவர்கள் அதிதி உரையாற்றினர்.

இதில் அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் குழந்தைசாமி அர்த்தபுஷ்டியான உரையை நிகழ்த்தினார்.

ஆளுமையான அவரின் உரை, அவரின் அறிவியலுக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு. பாரத அரசிடம் பத்மபூஷணம் விருது பெற்ற பேராசிரியர் குழந்தைசாமிக்கு தமிழகத்தில் இருக்கக் கூடிய மதிப்பை அவரின் உரையின் நிறைவில் ஒலித்த கரகோஷம் வெளிப்படுத்தியது.

இவ்விதம், உரைகள் நிறைவுற்ற பின்னர், பல்மருத்துவத்தில் பட்டம் பெற்றவர்களுக்கான பட்டமளிப்பு இடம்பெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் போன்று 'வேந்தரால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ்.... பெயர் வாசிக்கப்பட்டவர்களுக்கு.... பட்டத்தை வழங்குகிறேன்' என்ற வாசிப்புகள் எதுவும் கிடையாது.

பல்மருத்துவத்துறைப் பீடாதிபதி பெயர்களை வாசிக்க சவீதா பல்கலைக் கழகத்தின் இலட்சனை பொறிக்கப்பட்ட செப்பிலான பதக்கம் பட்டதாரிகளுக்கு அணிவிக்கப்பட்டது.

பட்டமளிப்பின் ஈற்றில் டாக்டர் ஞானசுந்தரம், நன்றி கூறினார்.

இவ்விடத்தில் டாக்டர் ஞானசுந்தரம பற்றிக் கூறாமல் விடுவது எனக்கு உடன்பாடானதல்ல.

ஏனெனில் நடந்துமுடிந்த பட்டமளிப்பு விழாவை ஒழுங்குபடுத்தியது, அங்கு வந்தவர்களை வரவேற்றது முதல் ஒலிபெருக்கியில் அறிவிப்புகளை வெளியிட்டது வரையான அனைத்தையும் அவரே செய்து முடித்தார்.

தனது கடமையைச் செம்மையாக நிறைவுபடுத்துவதற்காக ஓர் சாதாரண மனிதராக அவையில் ஓடியாடி, பணியாற்றினார்.

அழகிய தமிழில் அவர் ஆற்றிய நன்றியுரைக்காகவும், முதிர்ந்த வயதிலும் அவரின் உற்சாகமான பணிக்காகவும் வான் அதிரும் கரகோஷம், அந்த அரங்கில் ஒலித்தது.

### இருப்பிடம் திரும்பினோம்

நன்றியுரையைத் தொடர்ந்து செய்தியாளர் திரு.குமரனின் குறிப்பறிந்து அவரோடு எழுந்து அரங்கிலிருந்து வெளியேறினேன். கூடவே புகைப்படப் பிடிப்பாளரும் வந்து சேர்ந்தார். எம்மை ஏற்றி வந்த காரில் ஏறிக்கொண்டோம்.

### வாடகைக் கார்

தினமணி அலுவலகத்திலிருந்து சவீதா பல்கலைக்கழகத்திற்கு எம்மை ஏற்றிவந்த கார் தினமணிக்குச் சொந்தமானதென்றே நான் முதலில் நினைத்திருந்தேன். ஆனால் அது வாடகைக் கார் என்பதை திரும்பி வரும் போது உணர்ந்து கொண்டேன். நாம் பயணித்த காரில் ஒலித்த றேடியோ ஹோல (Radio Call) அது வாடகைக் கார் எனபதைக் காட்டித் தந்தது. அடிக்கடி றேடியோ ஹோல் வந்த படியால் செய்தியாளர் குமரன் கார்ச் சாரதியிடம் கேட்டார். 'நீங்கள் புறப்பட்டு

என். விஜயன்

விட்ட செய்தியை அறிவித்து விட்டீர்களா...' இந்தக் கேள்விக்கு சாரதியின் பதில் அது வாடகைக்கார் என்பதை உறுதி செய்தது. வாடகைக் கார் என்றால் யாழ்ப்பாணத்தில் உள்ளது போலல்ல.

மாறாக சென்னையில் பல நிறுவனங்கள் இத்தகைய வாடகைக் கார் சேவையை வழங்குகின்றன. கார் தேவையானவர்கள் குறித்த நிறுவனத்திற்கு அறிவித்தால் போதுமானது.

(வளரும்)

# யாரோடு நோவோம்? யார்க்கெடுத் துரைப்போம்?

இந்தியாவின் தமிழ் நாட்டில் வசிக்கும் ஈழத்தமிழர்கள், குறிப்பாக ஈழ அகதிகள், பல்வேறு துன்பங்களைத் தொடர்ச்சியாக அனுபவித்து வருகின்றார்கள்.

செய்திக்கட்டுரை

1980களின் ஆரம்பம் முதல் 2000 வரை இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரம், போர் நடவடிக்கைகளால் கடல்வழியே தமிழகத்திற்கு இடம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்கள் இராமநாதபுரம் - மண்டபம் அகதிகள் முகாமிலும் அதனூடாக பிற மாவட்டங்களிலும் தங்க வைக்கப்பட்டு தமிழக அரசாலும் இந்திய அரசாலும் பராமரிக்கப்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே.

இந்நிலையில் 1990களுக்கு முன் இருந்த ஈழத்தமிழர் மீதான அனுதாபமும் ஆதரவும் தமிழக - இந்திய மக்களிடமும், அரசுகளிடமும் குறையத் தொடங்கியது. சுமார் 15 வருடங்களாக இத் துரதிஷ்ட சூழல் தொடர்கிறது.

இன்று இலங்கையில் நிலவும் போர் நிறுத்த சூழலில் ஈழ அகதிகள் பலரும் சென்ற வழியேயும் (கடல் மார்க்கம்), உரிய முறையிலும் (வான் மார்க்கம்) தாயகம் திரும்பி வருகின்றனர். இவர்களில் இருநாடுகளின் சட்டத்திற்குப் புறம்பாகக் கடல் மார்க்கமாகத் திரும்ப எத்தணிக்கும் அகதிகள் கடலில் படகு விபத்து மற்றும் இடைவழியில் இறக்கி விடப்படுதல், கடற்படைகளின் கெடுபிடி ஆகியவற்றால் சித்திரவதைத் துன்புறுத்தல்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது.

அதுமட்டுமல்லாது இந்திய - இலங்கை மீனவர்களின் படகுகளில் இந்திய ரூபாய் 2500 முதல் 5000 வரை அதிகளவு பணம் செலுத்தி ஏமாறுவதுடன், சில சமயங்களில் தமிழகக் காவல்துறை மற்றும் கடலோர காவல்படையினரிடமும் சிக்கி கொடுத்த பணத்தையும் மீளப்பெற முடியாது நீதிமன்றுகளிலும், சிறைகளிலும் அவதியுறுகின்றனர்.

இவற்றிற்கு மூலகாரணம் தாயகம் திரும்பும் பேராவல் என்றாலும் அரசு அதிகாரிகளின் அசமந்தப்போக்கும் பெரும்பங்கு வகிக்கின்றது. முகாம்களில் உரிய வசதிகளைச் செய்து தராமை, மீளத்திரும்பலுக்கான பதிவுகளிற்கான அலைச்சல், இலங்கையின் இராணுவத் தேடுதல் போல முகாம் அதிகாரிகள் அடிக்கடி நடத்தும் தணிக்கைக் கெடுபிடிகள், தணிக்கையின் போது முகாமில் இருக்காவிட்டால் தண்டனை, வெளித்தேவைகளுக்குச் செல்வதானால் 'பாஸ்' நடைமுறை அதற்கும் இலஞ்சம் தரவேண்டிய கொடுமை என்பனவும் முக்கிய காரணங்களாக அமைகின்றன.

இவற்றை ஈழ ஏதிலியர் அமைப்பும் அதன் தலைவர் செ.சந்திரஹாசனும் உரிய முறையில் கவனிப்பதில்லை என்ற குற்றச்சாட்டும் அகதிகள் மத்தியில் உள்ளது. இவை ஒருபுறமிருக்க முகாம்களுக்கு வெளியே இருக்கும்

தம்பியண்ணா

ஈழமக்களும் பொலிஸ் பதிவு என்ற வகையில் பணச் சுரண்டல் மற்றும் மிரட்டல்களுக்கு உள்ளாகின்றனர்.

இதிலும் உச்சக்கொடுமை மதுரை முகாமில் தங்கியிருந்த ராதிகா என்ற மாணவியும், வெளியே தங்கியருந்த மயு,ரணி என்ற மாணவியும் காதல் விவகாரத்தில் படுகொலை செய்யப்பட்டுள்ளமையாகும்! ஈழத் தமிழனை இனி கடவுள்தான் ...! □

## நள்ளிரவில் உள்ளாடையுடன் பெண் கோப்பாய் அதிகார் வீதியில் சம்பவம்

பின்னிரவு வேளையில் உள்ளாடையுடன் மட்டும் சென்று வீட்டாரைத துயிலெழச் செய்து வீடு வீடாக இளம் பெண் ஒருவர் ஆடை கேட்ட சம்பவம் கோப்பாய் மத்திப் பகுதியிலுள்ள அதிகார் வீதி, அண்ணமார் கோவிலடிப் பகுதியில் அண்மையில் நடைபெற்றுள்ளது.

பின்னிரவு வேளையில் வீட்டார் ஒருவர் துயிலெழுந்த போது முன்புறமாகவுள்ள ஒழுங்கையிலிருந்து இருவர் சைக்கிளில் வேகமாக ஓடிச சென்றுள்ளனர். அதன்பின் தகாத நடத்தைக்கென அழைத்துவரப்பட்ட வேறு இடத்தைச் சேர்ந்த இளம் பெண் ஆடை கேட்டு வீடு வீடாகச் சென்றுள்ளார்.

எனினும், ஒருவரும் ஆடை கொடுக்க முன்வரவில்லை. சில வீட்டார் பேய் நடமாட்டம் எனக் கருதி வீட்டைப் பூட்டியுள்ளனர். இப் பகுதியிலுள்ள திருத்தப்படாத வீடும் வீட்டுக்கு அண்மையிலுள்ள கைவிடப்பட்டதும் பற்றைகளால் மூடப்பட்டதுமான பாரிய நீர்த்தொட்டியுமே இச் செயற்பாடுகளுக்குக் காரணமாக அமைந்துள்ளது. கூடுதலாக இப்பகுதியிலுள்ள ஒரு சில இளைஞர்களின ஆதரவுடன் வேறு இடத்தைச் சேர்ந்தவர்களே இந் நடவடிக்கையிலீடுபட்டு வருவதுடன் வார இறுதி நாட்களில் மதுவிருந்தும இப்பகுதிகளில் நடைபெற்று வருவதாகவும் தெரியவருகிறது. (அ-79)

## பல வருடங்களாக இயங்காமலிருந்த
# தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை 16 இலிருந்து முதற்கட்டமாக இயங்கும்

(யாழ்ப்பாணம்)

யுத்தம் காரணமாக பல வருடங்களாக இயங்காமல் இருந்த தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை இம்மாதம 16ஆம் திகதியிலிருந்து முதற்கட்டமாக இயங்கவுள்ளதாக யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதிப்பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 16ஆம்திகதியிலிருந்து தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் கதிர்வீச்சு சிகிச்சை முறையும், தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையின் வெளிநோயாளர் மற்றும் கிளினிக் பிரிவு என்பனவும் இயங்கவுள்ளன.

இதேவேளை, தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் உள்ள விடுதிகளில் இரண்டு விடுதிகளே தற்போது பூரணமாக புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. ஏனைய விடுதிகள் புனரமைப்பு செய்யப்படாததனால் தற்போது நோயாளர்கள் 24 மணித்தியாலமும் தங்கி நின்று சிகிச்சை பெறமுடியாத நிலை உள்ளது.

இதனால் இவ் வைத்தியசாலையானது பகலில் மட்டுமே இயங்கவுள்ளது.

இவ் வைத்தியசாலையின் விடுதிகள் அனைத்தும் பூரணமாக புனரமைப்புச் செய்யப்பட்டதன்பின்னர் இரண்டாம் கட்டமாக நோயாளர்கள் 24 மணித்தியாலமும் தங்கி நின்று சிகிச்சை பெறமுடியும்.

இராணுவ பாதுகாப்பு வலயத்தில் உள்ள இவ் வைத்தியசாலைக்கு நோயாளர்கள் சென்று சிகிச்சை பெறுவதற்கு இராணுவத் தலைமையகமும் அனுமதி கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற19)

# கூட்டமைப்பு அரசின் ஆட்சியில் 1,17,000பேருக்கு நிரந்தர நியமனம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் சுமார் ஒரு இலட்சத்து 17 ஆயிரம் பேருக்கு நிரந்தரத் தொழில்வாய்ப்பை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக சுற்றாடல் இயற்கை வள பிரதியமைச்சர் பந்துல பஸ்நாயக்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு குருநாகல் மாவட்டத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவர்களுள் 42 ஆயிரத்திற்கும் அதிகமான பட்டதாரிகளும் எழுதுவினைஞர் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட 12ஆயிரம் பேரும் அடங்குகினறனர். அரசாங்கம் பயணம் செய்யும் பாதை சரியாக இருக்குமாயின் யார் எந்தவிதக் கருத்துக்களைத் தெரிவித்தாலும் கூட்டமைப்பை வீழ்ச்சியடையச் செய்யமுடியாது என்றும் சுற்றாடல் இயற்கைவள பிரதியமைச்சர் பந்துல பஸ்நாயக்க மேலும் தெரிவித்தார். (ற-2)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பை அதிகரிக்க தொழிற்பயிற்சிப் பிரிவு

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் அதிகரித்துள்ளதையடுத்து வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் தொழில் உறவுகள் அமைச்சு தொழிற்பயிற்சிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தவுள்ளது.

இந்தப் பயிற்சிப்பிரிவில் தாதிமார்,தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் மேசன்மார், தச்சுத்தொழிலாளர்கள் ஆகியோருக்கு பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன.

கணனிப் பயிற்சிகள்,விவசாயப் பயிற்சிகள் ஆகியனவும் இதில் அடங்கும். வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையினை விருத்தி செய்வதன் மூலம் நாட்டிற்கு அந்நிய செலாவணியை அதிகமாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொழில் உறவுகள் அமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்துள்ளார். (ற-9)

# இலங்கைக்கு வரும் வெளிநாட்டுக் கப்பல்களுக்கான போர் அபாயக் காப்புறுதிக் கட்டணத்தை நீக்க முடிவு

(கொழும்பு)

அச்சமும் சந்தேகமும் இன்றி வரக்கூடிய பாதுகாப்பான சமாதான சூழல் ஒன்று இலங்கையில் நிலவுவதால் இலங்கைத்துறைமுகத்திற்கு வரும் வெளிநாட்டுக் கப்பல்களுக்காக இங்கிலாந்து லொய்ட் நிறுவனம் விதித்திருந்த போர் அபாயக் காப்புறுதி மேல்திக கட்டணத்தை நீக்குவதற்கு லொய்ட் நிறுவனத்தின் கூட்டு யுத்த கமிட்டி தீர்மானிததிருப்பதாக துறைமுக விமான சேவை அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த 20ஆம் திகதியில் இருந்து போர் அபாயக் காப்புறுதி மேலதிக கட்டணத்தை நீக்குவதற்கு தீமானித்திருப்பதாக லொய்ட் நிறுவனம் இங்கிலாந்தில் உள்ள இலங்கைத் தூதுவராலயத்திற்கு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

இந்த மேலதிக கட்டணம் நீக்குதல் இலங்கைக்கு வருகின்ற கப்பல்களுக்கு அறவிடப்படும் கப்பல் கட்டணத்தை குறைப்பதில் நேர டியாகச் செல்வாக்கு செலுத்துகின் றது.

எனவே, அது இந் நாட்டு வர்த்தக நடவடிக்கை மீது கணிசமான வேறுபாட்டை உண்டு பண்ணுவதற்கு காரணமாக அமையும் என துறைமுக,விமானசேவை அமைச்சின் செயலாளர் திலக்கொல்லுறே தெரிவித்துள்ளார்.

கப்பல்களுக்கான போர் அபாய காப்புறுதி மேலதிக கட்டணம் நீக்கப்பட்டாலும் கப்பல் பொருட்களுக்காக விதித்துள்ள போர் அபாயக் காப்புறுதி மேலதிக கட்டணம் இன்னமும் மாறுபடாமல் இருப்பதாக துறைமுக, விமான சேவை அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த 2001 யூலை மாதம் கட்டுநாயக்க விமான நிலையம் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகிய பிறகு இலங்கைக்கு வரும் கப்பல்களுக்கு லொய்ட் நிறுவனத்தின் இந்த மேலதிக கட்டணம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ற-9)

# சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நஷ்டஈடுகள் வழங்கப்படவில்லை

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தவர்களுக்கு உரிய நஷ்ட ஈடுகள் வழங்கப்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு ஒரு வாரத்திற்குள் மக்களின் வாழ்க்கையை கட்டியெழுப்புவதாக அரசாங்கம் உறுதியளித்திருந்தது.

ஏனினும் அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்தவர்களுக்கு வெளிநாடுகளில் கிடைக்கப்பெற்ற நிவாரணங்களைக் கூட உரிய முறையில் அரசாங்கம் பகிர்ந்தளிக்கவில்லை.

எனவே, மக்களின் உரிமைகளை பறித்துக்கொள்ள ஒருபோதும் நாம் இடமளிக்கப் போவதில்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும். மக்களின் வாழ்க்கைச் செலவை குறைப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கம் மக்கள் குறித்து சிந்திக்காது தமது அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்வதற்காக மட்டுமே செயற்படுகிறது எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ற-9)

# பாடசாலைச் சீருடை உள்ளூர்த் துணிகளில்

(கொழும்பு)

பாடசாலை மாணவ, மாணவிகளுக்கு உள்ளூர்த் துணிகள் சீருடையாக வழங்கப்படும் என்று கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

12 உள்ளூர்க் கம்பனிகளிடம் இருந்து இந்தத்துணிகள் கொள்வனவு செய்யப்படவிருக்கின்றது.

ரத்மலானையில் உள்ள புடவை பயிற்சி நிலையத்தில் இந்தத் துணிகளின் தரம் சோதிக்கப்படும். 40 இலட்சம் பாடசாலை மாணவ, மாணவிகளுக்கு சீருடைகளுக்காக ஒரு கோடி 30 இலட்சம் மீற்றர் துணிகளை கொள்வனவு செய்ய 120 கோடி ரூபா செலவிடப்படும்.

2006ஆம் ஆண்டில் முதலாவது தவணை ஆரம்பமாகும் போது இந்தத் துணிகளை வழங்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ9)

# மக்கள் வங்கியின் 44ஆவது ஆண்டு விழா



(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் 44ஆவது ஆண்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை மக்கள் வங்கியின் கன்னாதிட்டி கிளையில் நடைபெற்றது.

மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் அ. குகதாசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மங்கள விளக்கை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி மற்றும் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட மக்கள் வங்கியின் வட வலய உதவிப் பொதுமுகாமையாளர் மு.க.சிவபாதவிருதயர், சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் ரி.கே.ஆனந்தராசா, மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் துரைசிங்கம் ரகு,செலான் வங்கியின் யாழ். முகாமையாளர் கனகலிங்கம், கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் பே. கனகசபாபதி,இலங்கை வங்கியின் வட வலய உதவிப் பொதுமுகாமையாளர் க.பாலசுப்பிரமணியம்,கன்னாதிட்டி மக்கள் வங்கியின் ஓய்வுபெற்ற முகாமையாளர் அ. கோபாலகிருஷ்ணன், தீவகப் பிரதேச செயலக உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து கன்னாதிட்டி மக்கள் வங்கியின் முகாமையாளர் நித்தியானந்தன் வரவேற்புரை நிகழ்த்தினார். இதனையடுத்து வண.பிதா சகாயம் அடிகளாரது ஆசியுரையைத் தொடர்ந்து வாழ்த்துரைகளும், கௌரவ விருந்தினர் உரை, சிறப்பு விருந்தினர் உரை,சிறப்புரை என்பனவும் இடம்பெற்றன.

இதனை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தியினால் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. தொடர்ந்து மக்கள் வங்கியின் வாடிக்கையாளர்களும் கௌரவிக்கப்பட்டனர். (ற-19)

# சாவல்கட்டுக்கு வெள்ளவாய்க்கால்

(பொன்னாலை)

சாவல்கட்டு கிராமத்தில் மழை காலங்களில் தேங்கும் வெள்ளத்தை வழிந்தோடுவதற்கு வசதியாக வெள்ள வாய்க்கால் எதுவும் இதுவரை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருட இறுதிப்பகுதியில் பெய்த மழைகாரணமாக மேற்படி பகுதியில் உள்ள 120 வரையிலான குடும்பங்கள் தமது வீடு வாசல்களையும் சொத்துடமைகளையும் இழந்து பொதுக்கட்டடங்கள், பாடசாலைகளில் வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

இந்த அவலநிலையை தமது பகுதி கிராம அலுவலர் ஊடாக சண்டிலிப்பாய் பிரதேச செயலருக்கும்- மானிப்பாய் பிரதேச சபையினருக்கும் சம்பந்தப்பட்ட மக்கள் நேரில் காண்பித்தனர் என்பது தெரிவிக்கப்படுகின்றது. (அ-49)

# தனியார் பஸ் வண்டிகளுக்கு எரிபொருள் விநியோகம்

(கொழும்பு)

தேவையான நிறுவனங்களை மாத்திரம் இனம்கண்டு எரிபொருள் மானியத்தை வழங்கினால் பெருமளவு அந்நிய செலவாணியைச் சேமிக்கக் கூடியதாக இருக்கும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிறுவனங்களுக்கு எரிபொருள் மானியம் வழங்கும் நடைமுறையால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை திறைசேரி ஏற்கவேண்டும என்று கூட்டுத்தாபனத்தின் தலைவர் கூறியுள்ளார்.

தனியார் பஸ் வண்டிகளுக்கு மானிய அடிப்படையில் எரிபொருள் வழங்குவது பற்றி போக்குவரத்து அமைச்சும் திறைசேரியும் பேச்சுவார்த்தை மூலம் முடிவுகாண வேண்டும் என்று உலக சந்தையில் நிலவும் எண்ணெய் விலை மாற்றத்துடன் ஒப்பிடுகையில் ஒவ்வொரு லீற்றர் எரிபொருளுக்கும் அரசாங்கம் 10 ரூபா இழப்பீட்டை எதிர்கொள்ள நேரிடுவதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனததின் தலைவர் குறிப்பிட்டுள்ளார். (து-2)

### அமெரிக்கா தொடர் நடவடிக்கை

# விமானக் குண்டுத் தாக்குதலில் ஆப்கானில் 25 பேர் பலி

(ஆப்கானிஸ்தான்)

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க யுத்த விமானங்கள் மேற்கொண்ட குண்டுத்தாக்குதலில் 25 பேர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்க வீரர்கள் காணாமல் போன பிரதேசங்களிலேயே அமெரிக்க யுத்த விமானங்கள் இந்தத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன.

சச்சால் கிராமத்தில் உள்ள வீடுகள் மீது அமெரிக்க யுத்த விமானங்கள் மேற்கொண்ட இரண்டு தாக்குதல்களில் 25 பேர் உயிரிழந்துள்ளதாக ஆப்கானிஸ்தான் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உடனடியாக விமானத் தாக்குதலை மேற்கொள்ள வேண்டி நேரிட்டதால் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக அமெரிகக இராணுவம் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற மூன்று வெவ்வேறு மோதல் சம்பவங்களில் 39 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானின தெற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் கடந்த மூன்று மாதங்களில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் 500க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். இவர்களுள் கூடுதலானோர் தீவிரவாதிகள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-2)

# தென்னாபிரிக்காவின் கல்வித்திட்டம் மாற்றம்

தென்னாபிரிக்கா அதன் கல்வித்திட்டத்தில் மாற்றம் கொண்டுவருவது குறித்துக் கவனம் செலுத்தி வருகின்றது.

அதன்படி தென்னாபிரிக்காவில உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்கு அவர்களுடைய சொந்த மொழியில் பட்டப்படிப்பை மேற்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப் படுகின்றது.

இதுவரை காலமும் அங்கு ஆங்கில மொழி மூலமே பல்கலைக்கழகப் பாட நெறிகள் போதிக்கப்பட்டன.

வெள்ளையராட்சியில் மேற்கொள்ளப்பட்ட இந்தக் கல்வித் திட்டத்தில் மாறறம் கொண்டுவர தென்னாபிரிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அதன்படி அந்த நாட்டுப் பல்கலைக்கழகங்களில் 11 தென்னாபிரிக்க மொழிப் பாடங்கள் போதிக்கப்படவுள்ளன.

இதன்மூலம் அந்த நாட்டின் கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் பேணிப பாதுகாக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

புதிய கொள்கையின் மூலம் தென்னாபிரிகக மொழிகள் அனைத்திற்கும் பல்கலைக்கழகங்களில் சம அந்தஸ்து வழங்கப்படும். (ந-2)

# அடுத்தடுத்து இரு ரயில்கள் மீது குர்திஷ் கிளர்ச்சியாளர்கள் தாக்குதல்

## 8 பேர் பலி; 15 பேர் படுகாயம்

(துருக்கி)

துருக்கியின் கிழக்குப் பகுதியில் குர்திஷ் கிளர்ச்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலுக்கு ரயில் வண்டியொன்று இலக்காகியதில் அதில் பயணம் செய்த 8 பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் கொல்லப்பட்டதுடன் 15 பேர் படுகாயமடைநதுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச் சம்பவததில் காயமடைந்தவர்களுக்கு உதவும் முகமாக அனுப்பி வைக்கப்பட்ட 2 ஆவது ரயில் வண்டி மீதும் ஆயுதம் தாங்கிய தீவிரவாதிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

இரண்டாவதாக இடம்பெற்ற தாக்குதலின்போது ஏற்பட்ட சேதவிபரம் பற்றி எதுவும் அறிவிக்கப்படவிலலை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அரச செய்தி நிறுவனம் ஒன்று தகவல் வெளியிடுகையில்,

நேறறுமுன்தினம் தபால் பொதிகளை ஏற்றிச் சென்ற ரயில் வண்டியே முதலாவது தாக்குதலுக்கு இலக்காகி உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் காயமடைந்தவர்களில மூன்று பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்ற இடத்துக்கு 500 மற்றர் தொலைவில் மேலும் பல வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் குண்டுகளைச் செயலிழக்கச் செய்யும் குழவினர் இதனை அழித்திருப்பதாகவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (ந-2)

# கடல் அமிலமாகும் ஆபத்து

## நிபுணர்கள் எச்சரிக்கை

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள கார்னீஜ் சுறறுச்சூழல் ஆராய்ச்சி மைய நிபுணர் கென்கால்டீரா மற்றும் இங்கிலாந்து நிபுணர்கள் கூட்டாக கடல் வளம் குறித்து ஆய்வு நடத்தினார்கள்.

இந்த ஆய்வுக்குப் பிறகு அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடங்கள் அதிர்ச்சியளிப்பதாய் உள்ளன.

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் கடலும், கடல் தாவுரங்களும் முக்கிய பங்கு வகீக்கின்றன. ஆனால் கடல் நீரை மாசுபடுத்தும் வகையில் மனிதனின் நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன. இதனால் கரியமில வாயு அதிகமாக உற்பத்தி ஆகிறது.

கடல் நீர் கொஞ்சம் கொஞ்சமாக அமிலத்தன்மை உள்ளதாக் மாறிவிடுகிறது. கார்பன்டை ஆக்சைடு அளவு அதிகரித்து வருவதை கட்டுப்படுத்தாவிட்டால் 2100ஆம ஆண்டுக்குள் கடல் நீர் மிக மோசமான அளவுக்கு அமிலமாக மாறிவிடும்.

இதனால் கடல் தாவரங்களும், கடல் வாழ் உயிரினங்களும் அழிந்துவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது. வெப்பம் அதிகரித்து வருவதையும் கடல் நீர் ஓரளவு தணித்து வருகிறது.கடல் நீர் அமிலமாக மாறுவதால் வெப்பம் அதிகரிப்பதையும் தடுக்கமுடியாமல் போய்விடும. உலகம் முழுவதும் உருவாகும் மொத்த கழிவுகளில் 3இல் ஒரு பகுதி கடலில் தான் கலக்கின்றன.

இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# கமீலாவை கைப்பிடித்த சார்லஸுக்கு 1000 கண்டனக் கடிதங்கள்

பிரிட்டிஷ் இளவரசர் சார்லஸ் - கமீலா திருமணத்துக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்து 1000க்கும் மேற்பட்ட கடிதங்கள் சார்லஸுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஏப்ரல் 9ஆம் திகதி இளவரசர் சார்லஸ் கமீலாவை இரண்டாவது திருமணம் செய்துகொண்டார். 60 வயதை நெருங்கும் சார்லஸுக்கு இரண்டு மகன்கள் உள்ள நிலையில் சார்லஸ் கமீலாவைத் திருமணம் செய்துகொண்டது நாடடு மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், இளவரசரின் அலுவலக செயல்பாடு குறித்து நடந்த ஆய்வுக் கூட்டத்தில், கமீலாவை கைப்பிடித்த பிறகு சார்லஸுக்கு 23,003 கடிதங்கள் வந்துள்ளதாக அவருடைய அந்தரங்க செயலர் சாமைக்கேல் தெரிவித்தார். இதில் திருமணத்துக்கு ஆதரவாக 22,010 கடிதங்களும், எதிர்த்து 1,073 கடிதங்களும் வந்துள்ளன.

ஒரு சில மோசமான கடிதங்களைத் தவிர ஏனையக் கடிதங்கள் அனைத்தும் சார்லஸுக்கு அனுப்பப்பட்டு, அதற்குப் பதில் கடிதங்களும் எழுதப்பட்டுவிட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (ந)

### எரிபொருள் விலையைக் குறைக்குமாறு

# ரொனிபிளேயர் சவுதியிடம் கோரிக்கை

(இலண்டன்)

எரிபொருட்களின் விலையைக் குறைக்குமாறு பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் சவுதி அரேபியாவைக் கோரியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு சவுதி அரேபியாவின் முடிக்குரிய இளவரசர் அப்துல்லாவைச சந்தித்த போதே அவர் இவ்வாறு கேட்டுக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்தவாரம் ஸ்கொட்லாந்தில் நடைபெறவுள்ள ஜி.8 நாடுகளின் மாநாட்டில் இந்த விடயம் கவனத்திற்குக் கொண்டு வரப்படவுள்ளது.

உலக சந்தையில் எரிபொருள் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இவ எரிபொருள் விலை அதிகரிப்பு உலக நாடுகளின் பொருளாதாரத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது என்றும் பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் உலக சந்தையில் மசகு எண்ணை ஒரு பீப்பாயின் விலை 60 டொலா 95சதமாக அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-2)

# சுரங்க ரயில் பாதையை சோனியாகாந்தி திறப்பு

புதுடில்லியில் அமைக்கப்பட்ட சுரங்க ரயில் பாதையை காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியாகாந்தி திறந்து வைத்தார்.

முன்னைய டெல்கி பிரதேசத்தையும் புதிய நகர் பிரதேசத்தையும் இணைக்கும் வகையில் 11 கிலோமீற்றர் தூரத்துக்கு இந்த முதல் கட்ட சுரங்க ரயில்பாதை அமைக்கப்பட்டுள்ளது.

முழுவதும் 60கிலோமீற்றர் தூரம் கொண்ட இந்தத் திட்டத்தின் மூலம் வாகன நெரிசலையும் சுற்றாடல் பாதிப்பையும் தவிர்க்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகினறது.

இந்தத் திட்டத்துக்கு 22 மில்லியன் இந்திய ரூபா செலவிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட காலத்துக்கு 8 மாதங்களுக்கு முன்னரே இந்தக் கட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

32 கிலோமீற்றர் தூரம் கொண்ட அடுத்த கட்டத்தை எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்க இந்திய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. (ந-2)

# டயானாவின் கடைசி வார்த்தை

(இலண்டன்)

''உங்களுடை நீண்டகால காதலி கமீலா பார்க்கரைக் கரம்பிடியுங்கள்'' என்று பிரிட்டிஷ் இளவரசர் சார்லஸின் முன்னாள் மனைவி டயானா இறப்பதற்கு முன் சார்லஸுக்கு வேண்டுகோள் விடுத்திருந்ததாகத் தெரிவிக்கப் படுகிறது.

டயானாவின் நெருங்கிய நண்பர் சைமன் சிம்மன்ஸ் எழுதிய 'டயானாவின் கடைசி வார்த்தை' என்ற புத்தகத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து சிம்மனஸ் கூறியதாவது, கமீலாவைக் கைபிடித்து அவருக்கு கௌரவம் அளியுங்கள் என்று விபத்தில் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன் இளவரசர் சார்லஸுக்கு டயானா கடிதம் எழுதியிருந்தார்.

சார்லஸுடனான நட்பில் விரிசல் ஏறபட்ட பிறகு, திருமணம் செய்துகொள்ள டயானா அவருக்கு வெளிப்படையாகவே ஆலோசனை வழங்கினார்.

அரச குடும்பத்தில் சார்லஸ் - டயானா இடையே பிளவு ஏற்படுததியதற்காக கமீலா மீது பிரிட்டிஷ் மக்கள் கடும் கோபத்தில் இருந்தனர் எனறும் சிம்மன்ஸ் கூறினார். (ந)

# ஐ. நா. பாதுகாப்புச் சபையில் ஆபி. எக்கு 2 பிரதிநிதித்துவம்

## கோருவதற்குத் தீர்மானம்

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையில் ஆபிரிக்காவுக்கு 2நிரந்தரப் பிரதிநிதித்துவத்தைக் கோருவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆபிரிக்க நாடுகளின் கூட்டத்தில் இதறகான இணக்கம் காணப்பட்டுள்ளது.

ஆபிரிக்க ஒன்றியத்தின் மாநாட்டை முன்னிட்டு ஒன்றியத்தின் 53 நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்களின் விசேட கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

லிபியாவில் நேற்றுமுன்தினம் கூட்டம நடைபெற்றது. எனினும் நிரந்தரப் பிரதிநிதித்துவத்திற்கு எந்த நாடுகளைப் பிரேரிப்பது என்பது இதுவரை முடிவு செய்யப்படவில்லை.

ஐக்கிய நாடுகளின் சபையில் நிரந்தரப பரதிநிதித்துவத்தைப் பெறுவதற்காகத் தென்னாபிரிக்கா, எகிப்து, லிபியா, நைஜீரியா, கென்யா, செனகல் ஆகியவற்றில் இரண்டு நாடுகளுக்கே கூடுதலான வாய்ப்பு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-2)

# அல் - கெய்டா முக்கியஸ்தர் சவுதியில் சுட்டுக்கொலை

அல்கெய்டா இயக்கத்தின் முக்கியஸ்தர் ஒருவரை சவுதி ஆரேபியப் பொலிஸார் சுட்டுக் கொன்றுள்ளனர்.

சவுதி அரேபியாவின் தலைநகரான றியாத்தில் அல்கெய்டா தீவிரவாதிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையே இடம் பெற்ற மோதலியேயே இவர் கொல்லப்பட்டதாக அல்அரேபியத் தொலைக்காட்சி தெரிவித்துள்ளது. யூனிஸ் மொகமட் பொறாகிம் அல்ஹயாரி எனும் அல்-கெய்டா இயக்க முக்கியஸ்தரே இவ்வாறு கொல்லப்பட்டவராவா.

மொறாக்கா நாட்டைச் சேர்ந்த இவர் அல்-கெய்டா தீவிரவாத சந்தேகநபர் பட்டியலில 36ஆவதாக உள்ளடக்கப்பட்டிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-2)

மதுரையில் அமைக்கப்பட்டுள்ள சேது சமுத்திரத் திட்ட அலுவலகத்தை மத்திய கப்பல் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் டி. ஆர். பாலு நேற்றுமுன்தினம் திறந்து வைத்தார்.



# ஆசியாவில் எயிட்ஸ் நோய் தாக்கம் அதிகரித்து வருவதாக ஐ.நா. கவலை

ஆசியாவில் 'எயிட்ஸ்' நோய் முன்னொரு.போதும் இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை கவலை தெரிவித்துள்ளது.

உலகளாவிய ரீதியில் முன்னுரிமை அடிப்படையில் எயிட்ஸ் நோயைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் ஆசியாவில் 2010 ஆம் ஆண்டளவில் 12 மில்லியனுக்கும அதிகமானோர் எயிட்ஸ் நோயின் தாக்கத்திற்கு உள்ளாவார்கள் எனத் தெரிகிறது.

எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் நால்வரில் ஒருவர் ஆசியாக் கண்டத்தவர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சீனாவில் அனைத்து மாகாணங்களிலும எயிட்ஸ் நோய் பரவியுள்ளதாகவும், தென்னாபிரிக்காவுக்கு அடுத்ததாக எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டோர் அதிகமுள்ள நாடாக இந்தியா விளங்குவதாகவும் ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

H.I.V நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் விரைவாக முன்னெடுக்கப்படும் பட்சத்தில் எதிர்வரும் 5ஆண்டுகளில் ஆசியாவில் 6மில்லியன் பேரை H.I.V தாககத்திலிருந்து காப்பாற்ற முடியும் என்று கூறப்படுகிறது.

தற்போது ஆசியாவில் 8.2 மில்லியன் பேர் H.I.V நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இந்தியாவில் 1மில்லியன் பேர் H.I.V தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபை மதிப்பிட்டுளளது.

உலகலாவிய ரீதியில் H.I.V மற்றும் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 39இலட்சத்திற்கும் அதிகம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (து-9)

# மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி சலவைத் தொழிலாளர் சிக்கன கூட்டுறவுச் சங்க அங்கத்தவர் தொழில் செய்தவற்கென 1970ஆம் ஆண்டு கற்கோவலத்தில வழங்கப்பட்ட காணியில் மிதிவெடிகள இருந்ததினால் தொழில் செய்ய முடியாதிருந்தது.

இந்நிலையில், சுனாமி அனர்ததத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இக் காணி பகிர்ந்தளிகக ஏற்பாடாகியிருந்தது. ஆனால் இக் காணி தொழில் செய்ய வேண்டுமென்று கற்கோவளம் கிராம சேவையாளர், உதவி அரசாங்க அதிபர், பருத்தித்துறை சுனாமி செயற்குழு செயலகப் பணிப்பாளர், வடமராட்சிப பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் வெண்மை வாணிப சங்கங்களின் யாழ். மாவட்ட ஒன்றியம் ஆகியோருக்கு கடந்த 8ஆம் திகதி வடமராட்சி வெண்மை வாணிப சங்கத தலைவர் செ.கனகரத்தினம், செயலாளர் செல்வன இ.இரவீந்திரன், வடமராட்சி சலவைத் தொழிலாளர் சிக்கன கூட்டுறவு சங்க முன்னாள் தலைவர் சி.சரவணபவா ஆகியோர் மகஜர் கையளித்துள்ளனர். (ற)

# மட்டு. இல் பாதுகாப்பு அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக படையினர் மீதான தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து அம்மாவட்டத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

பொதுமக்கள் மீதான சோதனைக் கெடுபிடிகளை படையினரும் பொலிஸாரும் அதிகரித்துள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த சில தினங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதான வீதிகளில் பயணம் செய்யும் வாகனங்கள் திடீரென்று நிறுத்தப்பட்டு அவற்றில் தீவிர சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது. (ற-7)

# கதிர்காம இந்து யாத்திரீகர் விடுதி அமைச்சரின் பணிப்பில் நவீனமயம்

கதிர்காமத்தில் அமைந்துள்ள இந்து யாத்திரீகர்களுக்கான தங்கும் விடுதி கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சரும், கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு உதவும் அமைசசருமான கெளரவ டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின் பேரில் புனரமைக்கப்பட்டு நவீனமயமாக்கப்பட்டுள்ளதாக அமைச்சரின் இந்து சமய விவகாரங்களுக்கான ஆலோசகா சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம் அறிவித்துள்ளார். இதன்படி யாத்திரீகர்கள் தங்குவதற்கு இலகுவாக பல வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கதிர்காம யாத்திரையை மேற்கொள்ளும் யாத்திரீகர்களின் நன்மை கருதி இவ்விடுதி நவீனமயமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தககதாகும். (து)

# மது பாவனை, புகைத்தலுக்கு எதிரான பேரணி

யாழ்ப்பாணப் பொலிஸாரும் பாடசாலை மாணவர்களும் இணைந்து மது பாவனை புகைத்தலுக்கு எதிரான பேரணியொன்றை கடந்த வெள்ளிக்கிழமை நடாத்தினா.

இப்பேரணி காலை 10.00 மணி முதல் 11.00 மணிவரை நடைபெற்றது. யாழ்.பொலிஸ் நிலையத்திலிருந்து ஆரம்பமான இப்பேரணி ஆஸ்பத்தரி வீதி, கஸ்தூரியார் வீதி, ஸ்ரானலி வதியூடாக மீண்டும் ஆஸ்பத்தரி வீதியைச் சென்றடைந்து யாழ். பொலிஸ நிலையத்தில் முடிவடைந்தது.

இப்பேரணியில் பங்குகொண்ட மாணவர்கள் மதுபாவனை, புகைத்தல் தொடர்பான எதிர்ப்பு வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளை ஏந்திச் சென்றனா. (து19)

# சுவிஸ் யுவதி கொலை குறித்து இரகசியப் பொலிஸார் விசாரணை

(கொழும்பு)

வெலிக்கடைப் பகுதியில் உள்ள வீடமைப்புத் திட்டத்தல் சுவிஸ் யுவதி ஒருவர் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக இரகசியப் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கபபட்டுள்ளன.

கொலை செய்யப்பட்ட யுவதியின் வைத்திய அறிக்கையைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும், இக் கொலை தொடர்பாகப் பலரிடம் வெலிக்டை விசேட பொலிஸ் குழுக்கள் விசாரணை நடத்தி வாக்குமூலகங்களைப் பெற்றிருப்பதாகவும் நுகேகொட சிரேஷ்ட பொலிஸ் அத்தியேட்சகர் உதயபால தெரிவித்துள்ளார்.

கொலை செய்யப்பட்ட யுவதி அமெரிக்காவில் படித்து வந்தவர் என்றும விடுமுறைக்காக இவர் இலங்கை வந்திருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த யுவதியின் தாயார் இலங்கையராவார் தந்தை வெளிநாட்டவர் என்பதும குறிப்பிடத்தக்கது. (ற-2)

# சுனாமி நிவாரண நடவடிக்கைகள்
# அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கு அமையவே மேற்கொள்ளப்படும்

சுனாமி நிவாரண நடவடிக்கைக்கான பொதுக்கட்டமைப்பினால் அமுல் செய்யப்படும் திட்டங்களுக்கான நிதி நடவடிக்கைகள் அரசாங்க நிதிப்பிரமாணங்களுககு அமையவே மேற்கொள்ளப்படும் என்று நிவாரணப் புனர்நிர்மாண அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சின் செயலாளர் எம்.எஸ். ஜயசிங்க இது குறித்துத் தெரிவிக்கையில்,

இது சம்பந்தமாகக் காணப்படும் குறைபாடுகளை பாராளுமன்றத்தில் அரசாங்க கணக்கீட்டு குழுவின் கவனத்திற்குக் கொணடு வர முடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மத்திய வங்கியினால் திறைசேரி மூலம் வழங்கப்படும் நிதி இந்த வேலைத் திட்டங்களுக்கும் பயன்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# குறுகிய காலத்தில் பல முறை திருத்தப்பட்ட அரசியல் சட்டமூலம்

(கொழும்பு)

அரசியல் சட்டமூலம் தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருவதாக அரசியல் சட்டமூல விவகார அமைச்சர் டி.குணசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரசியல் சட்டமூலம் குறுகிய கால இடைவெளியில் அவ்வப்போது திருத்தி அமைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை 17 தடவைகள் அரசியல் சட்டமூலம் திருத்தப்பட்டுள்ளதாக அமைசசர் மேலும் சுட்டிக்காட்டினார்.

உலகில் வேறு எந்தவொரு நாட்டிலும் இவ்வாறு பல தடவைகள் அரசியல் சட்டமூலம் திருத்தியமைக்கப்பட்டிருக்குமா என்பது குறித்து தன்னால் சிந்தித்துப் பார்க்க முடியாதுள்ளதாக அவர் மேலும் தெரிவிததுள்ளார்.

எனவே தற்போதைய அரசியல் சட்டமூலத்தில் எந்த வகையான திருத்தங்களை மேற்கொள்ளுவது என்பது குறித்து முதலில் ஆராயவேண்டியுள்ளது என்று அவர் மேலும தெரிவித்துள்ளார். (அ-9)

# போதிய உடற்பயிற்சி இன்மையால் வருடாந்தம் 20 இலட்சம் பேர் உயிரிழப்பு
## உலக சுகாதார ஸ்தாபனம்

போதியளவு உடற்பயிற்சி இல்லாமை காரணமாக வருடாந்தம் சுமார் 20இலட்சம் பேர்வரை உயிரிழக்க நேரிடுவதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனம் மேற்கொண்ட ஆய்வொன்றிலிருந்தே இந்த நிலைமை கண்டறியப்பட்டுள்ளது.

புற்றுநோய் ஏற்படாமல் பாதுகாப்பதற்கும் உடற்பயிற்சி ஒருவகையில் பயனளிக்கிறது என்றும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அவ் ஆய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் புற்றுநோய்த் தடுப்புப பிரிவின் பணிப்பாளர் டாக்டர் லக்ஷ்மி சோமதுங்க இது குறித்துத் தெரிவிக்கையில்,

உடற்பயிற்சி மூலம் நீரிழிவு மற்றும உடற்பருமனைக் குறைக்க முடியும். எனவே, அனைவரும் ஒழுங்கு முறைப்படி போதிய உடற்பயிற்சி செய்ய வேண்டும் என்றார். (ற-2)

# கொல்லப்பட்ட படையினருக்கு பதவியுயர்வு

மட்டக்களப்பு, ஊறணியில் கடந்த வியாழக்கிழமை இனம் தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட சிறிலங்கா இராணுவ புலனாய்வுத் துறையைச் சேர்ந்த மூவருக்கும மரணத்துக்குப் பின்னரான பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக இராணுவம் அறிவிததுளளதாகத் தெரிகிறது.

சார்ஜன்ட் ஆர்.எஸ், டுலாத்ன ஸ்ராவ சார்ஜனாகவும, லான்ஸ் கோப்ரல் சமன் குமர முழு அந்தஸ்தைக் கொண்ட கோப்ரலாகவும், சாரதி சமிந்த குமார லான்ஸ கோப்ரலாகவும் பதவி உயர்த்தப்பட்டதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

# அரச ஊழியர்களுக்கான வீடமைப்பு கடன் திட்டம் சரிவர அமுல்படுத்தப்படவில்லை

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கான வீடமைபபுக் கடன் திட்டம் இன்னும் சரிவர அமுல் செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் முனமொழியப்பட்ட இந்தத் திட்டத்தை அரச வங்கிகள் அமுல்படுத்த முனைந்த போதும பிராந்திய வங்கிகள் சரிவர இதனை அறிந்திருக்கவில்லை என்று அரசாஙக ஊழியர்கள் ஆதங்கம வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, இந்தத் திட்டம் குறித்து வங்கிகள் மாத்திரமின்றி அரச ஊழியர்களும் போதிய விழிப்புணர்வைக் கொண்டிருக்கவில்லை என்று அரச சேவைத் தொழிற் சங்கக கூட்டமைப்புத் தலைவர் டபிள்யு. எச்.பியதாச தெரிவித்துள்ளார். விண்ணப்பத்தை யாரிடம் சமர்ப்பிப்பது என்பதைக் கூட ஊழியர்கள் அறிந்திருக்கவில்லை என்றும குறிப்பிட்டுள்ளார்.

பொதுவாக நிர்வாக உள்நாட்டலுவலகள் அமைச்சர் அமரசிறி தொடங் கொட இவ்விடயம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,

வீடமைப்புத் திட்டம் பற்றிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டு சில மாதங்கள் கழிந்துள்ள போதிலும் இன்னமும் பிரச்சினைகள் உள்ளன.

இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காக 30 கோடி ரூபாவைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடன்களை வழங்குவது தொடர்பாக வங்கிகள் கடைப்பிடிக்கும் வழமையான நடைமுறைகளுக்கு அமைய கடன் கொடுபபனவு மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிட்டார். (ற-2)

# கட்டமைப்பு ஏற்படுத்தினாலே நிதியுதவியென எந்த நாடும் கூறவில்லை -தினேஷ் குணவர்த்தன

(கொழும்பு)

சுனாமிக்கு பின்னரான நடவடிக்கை முகாமைத்துவ கட்டமைப்பில் கையெழுத்திட்டால மட்டுமே உதவிகள் வழங்கப்படும் என்று உலக நாடுகள் தெரிவிக்கவில்லை என மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பொறுப்பான அரசியல்வாதிகள் நாட்டை தவறான பாதையில் இட்டுச்செல்லக் கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு அதிகமான உதவி வழங்கும் நாடான யப்பான, இந்தியா, சீனா போன்ற நாடுகள் இதுவரை அவ்வாறு கூறவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏதேனும் ஒரு நாடு சுனாமிக்குப் பின்னராக நடவடிக்கை முகாமைத்துவ கட்டமைப்பில் கையெழுத்திட்டால் மட்டுமே நிதியுதவி வழங்கப்படும் என்று கூறியிருநதால் அந்த நாடு எது என்பது குறித்து இலங்கை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் எனபதே தமது கருத்து என்றும் அவர் மேலும தெரிவித்துள்ளார். (அ-9)

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல் - குறள்

வலம்புரி

# படையினரின் பாதுகாப்பு வேலி யாரைப் பாதுகாக்க!

மின்சாரம் பாய்ச்சப்பட்ட பாதுகாப்பு வேலியில் சிக்குண்ட குருநகர் மீனவர் ஒருவர் பலியான சம்பவம் குடாநாட்டு மக்களை வேதனைக்காளாக்கியுள்ளது.

எதிர்கால வாழ்வுக்காக நம்பிக்கையோடு கடலுக்குச்சென்று, வீடுதிரும்பும் வேளையில் குருநகர் கடற்கரையோரப்பகுதியில் உள்ள படையினரின் பாதுகாப்புவேலி அந்த மீனவரின் உயிரை காவுகொண்டுள்ளது.

பாதுகாப்பு வேலிக்குப் பலியான அப்பாவிப் பொதுமகனின் மரணத்திற்கான முழுப்பொறுப்பையும் படையினரே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

யுத்தகாலத்தில் எத்தனையோ துன்பங்களை அனுபவித்தவர்கள் வடபகுதி மீனவர்கள்.

தமிழர்கள் என்ற ஒரேகாரணத்திற்காக கடலுக்குச் செல்வதற்குக் கூட தடைவிதிக்கப்பட்டது.

இதன் காரணமாக நாளாந்தம் கடலுக்குச் சென்று சீவனோபாயம் நடத்தும் மீனவக்குடும்பம் வறுமையின் விளிம்பில்-வேதனையின் உச்சத்தில் தமது வாழ்வியலை கழித்தனர்.

கடலுக்குச் செல்வதற்கு தடை விதித்தன் மூலம் சொந்த மண்ணில்-சொந்த முயற்சிக்கு தடையிட்ட ஒரேநாடு இலங்கை என்ற பெருமை மட்டுமே சிங்கள ஆட்சியாளருக்கு கிடைத்தது.

தமிழர்கள் என்ற ஒரேகாரணத்திற்காக சொந்த நாட்டிலேயே வஞ்சிக்கப்பட்டவர்கள் வடபகுதி கடற்றொழிலாளர்கள்.

கடற்படையின் கெடுபிடிகள், தாக்குதல்கள் எல்லாவற்றையும் தாங்கி தமது முயற்சியில் நம்பிக்கை கொண்டு கடலுக்குச் சென்ற கடற்றொழிலாளி வீடு திரும்பும் சொற்ப நேரத்திற்குள் படையினரின் மின்சார வேலிக்கு இலக்காகிப் போவது என்பது எந்தளவு தூரம் நியாயமானது.

தனது குடும்பத்தை காப்பாற்றுவதற்காக ஆழ் கடலில் அலைமோதலுக்கும் காற்றின் வேகத்திற்கும் ஈடுகொடுத்து தன் இரத்தத்தை வியர்வையாக்கி கடல் வளத்தை தேடிக்கொண்டு வீடு திரும்பிய அந்த மீனவனுக்கு இலங்கை அரசு கொடுத்த பாதுகாப்பும் பரிசும் என்ன?

இது தான் ஒரு அரசின் பணியா? யாரிடம் இருந்து யாரைப் பாதுகாப்பதற்காக வேலி அமைக்கப்பட்டுள்ளது.

தமிழர்களின் தாயக பூமியில் தங்கியிருக்கும் இராணுவம் சற்றுச் சிந்திக்கவேண்டும். தென்னிலங்கையில் இத்தகையதொரு மரணம் நிகழ்ந்தால் அதனை ஜீரணித்துக்கொள்ள சிங்கள அரசால் முடியுமா?

இனத்தின் பிரிப்பில் ஆட்சி நடத்துவதும், நீதி கூறுவதும் நல்ல ஆட்சிக்கு அழகல்ல. இதனை இராணுவமும் தென்னிலங்கை மக்களும் புரிந்துகொள்ளவேண்டும்.

அரசும் விடுதலைப்புலிகளும் யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்துகொண்டுள்ள போதிலும் மின்சார வேலிக்குள் படையினர் பாதுகாப்புத் தேடுவதன் பொருள்தான் என்ன.

தமிழர்கள் மீது படையினருக்கு இம்மியும் நம்பிக்கை இல்லை என்பதே அதன் அர்த்தமாகும். ஆக தமிழர்களின் தாயக மண்ணில் குடிகொண்டுள்ள இராணுவத்தால் தமிழ்மக்களை பாதுகாக்க முடியாது என்பதே உண்மை.

# பட்டதாரி நிரந்தர நியமனத்தில் இழுபறி; தீர்வுகாணப்படாவிடின் போராட்ட முஸ்தீபு

(கொழும்பு)

அரசாங்க சேவையில் பயிற்சிக்காக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள 42 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலைக்கு உடன் தீர்வு காணப்பாடவிட்டால் நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக பட்டதாரி தொழில் பெறுநரின் கூட்டமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த இழுபறி நிலைக்கு தீர்வுகாண்பதற்கு அரசாங்கத்திற்கு ஒருவார கால அவகாசத்தை தாம் வழங்கியுள்ளதாகவும், மேற்படி தொழில் பெறுநரின் கூட்டமைப்பின் தலைவர் சந்தன சூரியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

பட்டதாரி பயிலுநர்களின் நிரந்தர நியமன பிரச்சினை தொடர்பான நிப்போன் ஹோட்டலில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் இங்கு மேலும் தெரிவிக்கையில்,அமைச்சு மற்றும் அரச திணைக்களங்களில் பயிற்சிக்காக இணைத்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கு தற்போது படிப்படியாக நிரந்தர நியமனம் வழங்கப்பட்டு வருகிறது.

எனினும் இந்த நியமன விடயத்தில் பல்வேறு குளறுபடிகள், முறைகேடுகள் இடம்பெறுவதாக அறியப்படுகிறது.

அதேபோன்று நிரந்தர நியமனம் வழங்குவதற்காக நடத்தப்படுகின்ற நேர்முகப் பரீட்சையிலும் அரசியல் செல்வாக்கு பயன்படுத்துவதாக தெரியவருகின்றது.

தகுதியானவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்காமல் அரசாங்கத்தை விட்டு ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்ட மைப்பு வெளியேறமுடியாது.

இப்பரச்சினைக்கு உரிய தீர்வு கிடைக்காது விடின் இன்னும் இரு வாரங்களில் நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு நாம் தீர்மானித்துள்ளோம் இந்த ஆர்ப்பாட்டங்கள் அலரி மாளிகை ,ஜனாதிபதி மாளிகை உட்பட பட்டதாரிகள் பயிற்சி பெறுகின்ற அமைச்சு மற்றும் திரணைக் களங்களுக்குமுன்பாக நடத்தப்படும் என்றார்.

(ந-9)

# மோட்டார் சைக்கிளில் செல்வோர் சகலரும் பட்டியுடன் தலைக் கவசம் அணியவேண்டும்

## யாழ். மாவட்ட மோட்டார் வாகனப் பரிசோதகர்

(யாழ்ப்பாணம்)

மோட்டார்சைக்கிளில் செல்பவர்கள் தலைக்கவசத்தை மட்டும் அணிந்தால் போதாது. அதன் பட்டியையும் நிச்சயமாக பூட்டுதல்வேண்டும் என யாழ். மாவட்ட மோட்டார் வாகனப் பரிசோதகர் ஆர்.எ.ரி.குராஸ் தெரிவித்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் செல்பவர்களும், அதை ஓட்டுபவர்களும் தலைக்கவசத்தை அணிந்து அதன் பட்டியையும் பொருத்தவேண்டும்.

இவ்வாறு செல்லும் பட்சத்தில் திடீரென வீதி விபத்துக்கள் ஏற்பட்டாலும் அதன் பாதிப்பை குறைக்கலாம். எனினும் தலைக்கவசத்தை அணிந்துவிட்டு அதன் பட்டியை பூட்டாமல் செல்லும்போது திடீர் விபத்து ஒன்று ஏற்படும் வேளையில் தலைக்கவசம் தலையை விட்டு கழன்றுவிடும். இதனால் உயிர் ஆபத்துக்கூட ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

இதைவிட வாகனச்சாரதிகள் நாற்சந்திகளில், முச்சந்திகளில் வீதியைக்கடக்கும்போது வாகனத்தை மெதுவாகச் செலுத்தி உரிய வானக சமிக்ஞைகளை காண்பித்து வீதி ஒழுங்கு முறைகளுக்கு ஏற்படி செயற்பட்டால் யாழ். குடாநாட்டில் ஏற்படுகின்ற வீதி விபத்துக்களை குறைக்கமுடியும். இவ் நடைமுறையை ஒழுங்கை ஒன்றிலிருந்து பிரதான வீதியை வந்தடையும் சந்தர்ப்பங்களிலும் கடைப்பிடிக்க வேண்டும்.

இதைவிட நாற்சந்திகள், முச்சந்திகளில் வேகக்கட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டால் சடுதியாக வருகின்ற வாகனங்களும் இவ் நாற்சந்திகளிலும், முச்சந்திகளிலும் வேகத்தைக் குறைத்து கடக்க இலகுவாக இருக்கும். இதனாலும் வீதி விபத்துக்களை ஓரளவு குறைத்துக்கொள்ளமுடியும் எனவும் அவர் மேலும் சுட் டிக் காட்டியுள்ளார். (ந-19)

# தொழில் செய்யும் இடங்களில் இராணுவ மின்சார வேலிகள்

## பொது அமைப்புக்களின் ஒன்றியம் கண்டனம்

(யாழப்பாணம்)

குருநகர் பகுதியில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டிருந்த மின்சார முட்கம்பிவேலியில் சிக்கி நேற்று முன்தினம் குருநகரைச் சேர்ந்த இராஜ் என்ற இளைஞன் உயிரிழந்ததையடுத்து யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் இதனை வன்மையாக கண்டித்துள்ளது.

இது விடயம் தொடர்பில் ஒன்றியம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில்,

அரசின் கடல்வலயச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டு தொழில் இழந்து வாழ்வதற்கான கதியின்றி ஜீவனோபாயத்திற்காக சிறிய தொழிலையாவது மேற்கொண்டு வாழ்வோமென்ற நம்பிக்கையுடன், தன் குடும்பத்தின் சுமைகளை தானே சுமக்கவேண்டுமென்றநோக்குடன் புறப்பட்ட இளைஞன், தொழில்செய்யும் பகுதிகளில் திட்டமிட்டு கண்மூடித்தனமாக இராணுவத்தினரால் போடப்பட்டிருந்த மின்சார ஒழுக்குகளில் அகப்பட்டு பரிதாபமான முறையில் உயிரிழந்துள்ளார். இதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

இராணுவத்தினர் தங்கள் காவலரண்களையும் வேலிகளையும் அகற்றிவிட்டு குடாநாட்டிலிருந்து வெளியேறினால்தான் இதுபோன்ற இழப்புக்களை தடுக்க, தவிர்க்க முடியும்.

இந்த இளைஞனின் பிரிவால் துயருறும் குடும்பத்திற்கு யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றது என்றுள்ளது.

(ந-9)

# மரமுந்திரிகை பயிர்ச்செய்கை குறித்து 1வது ஆய்வுநூல் வெளியிட்டு வைப்பு

இலங்கை மரமுந்திரிகை பயிர்ச்செய்கை தொடர்பான ஆங்கிலம் மற்றும் தமிழ்மொழிகளில் எழுதப்பட்ட முதலாவது ஆய்வுநூலின் வெளியீட்டுவிழாவும், நன்கு வளர்ச்சியூட்டப்பட் புதிய ரக மூன்று வகையான மரமுந்திரிகை கன்றுகளை மரமுந்திரிகை விவசாயிகளிடத்தில் கையளிக்கும் வைபவமும் அண்மையில் கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்துசமய அலுவல்கள் அமைச்சரும் மற்றும் கல்வி வாழ்க்கை தொழிற்பயிற்சிக்கு உதவும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தவின் தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனமும் வஜம்ப பல்கலைக்கழகமும் இணைந்து இந்த வைபவத்தை ஏற்பாடு செய்திருந்தன.

இவ் வைபவத்தில் உரையாற்றிய அமைச்சின் செயலாளர் க.மகாநந்தன், மரமுந்திரிகை பயிர்ச்செய்கை ஆய்வு தொடர்பான நடவடிக்கைகளுக்கு அடுத்த வருடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. நிதியமொன்றை ஆரம்பிக்கவுள்ளதாகவும், இந்தியாவிலிருந்து உதவிகளைப் பெற்று இலங்கையின் மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

கூட்டுத்தாபனத்தின் தலைவர் எஸ்.தவராசா அங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் பகுதிகளில் 80%மான பகுதிகள் வட-கிழக்கு மாகாணங்களில் இருப்பதால் மேற்படி ஆய்வு நூலினை தமிழ்மொழியிலும் வெளியிட நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், சர்வதேச விற்பனைச் சந்தைக்கு உகந்த வகையில் பயிர்ச்செய்கையும், உற்பத்தியும் அமைய வேண்டும் என்றும் கூறினார்.

மேற்படி வைபத்தில் இலங்கைமரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் பொதுமுகாமையாளர் டபிள்யு.பீ.கலகெதர, வயம்ப பல்கலைக்கழக பேராசிரியர் எஸ்.ஜே.பீ.ஏ.ஜயசேகர, பேராசிரியர் எச்.பீ.எம்.குணசேன அமைச்சின் அரிகாரிகள் மற்றும் இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபன அதிகாரிகள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ந)



## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

மூட நம்பிக்கைக்கு முழந்தாளிடுவதும் உங்கள் மனதிற்கே உங்களை விற்றுவிடுவதுமாகிய இது எனது ஆன்மாவாகிய உங்களுக்குத் தகாது. நீங்கள் எல்லையற்றவர்கள், மரணமற்றவர்கள், பிறப்பற்றவர்கள். நீங்கள் அளவு கடந்த ஆன்மா ஆதலால் அடிமையாயிருப்பது உங்களுக்குப் பொருந்தாது. எழுந்திருங்கள் விழித்துக்கொள்ளுங்கள் எழுந்து நின்று போர்புரியுங்கள்.

சுவாமி விவேகானந்தர்

## புத்தளத்தில் கைக்குண்டு மீட்பு

(புத்தளம்)

புத்தளம் தபாலக சுற்றுவட்டத்திலிருந்து கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கைக்குண்டின் கிளிப் அகற்றப்பட்டிருந்ததினால் அப் பகுதியிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்ட பின்னர் கைக்குண்டு பொலிஸாரினால் மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட கைக்குண்டு 213 வது படையணியின் குண்டு செயலிழக்கும் பிரிவினரால் அது செயலிழக்கப்பட்டது. (ச-15,8)

## அரச அதிகாரிகள் சிலர் இராஜினாமா

(கொழும்பு)

கூட்டமைப்பு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் சிலர் அடுத்த வாரம் அளவில் தமது பதவிகளை விட்டு விலகவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கூட்டமைப்பு அரசிலிருந்து ஜே.வி.பி விலகியதைத் தொடர்ந்து நான்கு ஜே.வி.பி.அமைச்சர்களும் பதவியில் இருந்து விலகினர்.

இதனை அடுத்து ஜே.வி.பியினால் நியமிக்கப்பட்ட அவ்வமைச்சர்களின் அதிகாரிகளும் தமது பதவியில் இருந்து விலகவுள்ளனர்.சுமார் 30ற்கும் மேற்பட்ட அதிகாரிகள் விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச-8)

## சேது சமுத்திரத்திட்டம் குறித்து இந்.-இலங்கை அரசு மீண்டும் பேச்சு

(கொழும்பு)

சேதுசமுத்திரத்திட்டம் குறித்த தொழில்நுட்பரீதியான இலங்கை, இந்தியப்பேச்சுவார்த்தைகள் இம்மாதம் நடைபெறவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இப்பேச்சுக்கள் நடத்தப்படும் திகதிகள் குறித்து இன்னமும் முடிவாக வில்லை. சேது சமுத்திரத்திட்டம் தொடர்பாக இரு நாடுகளுக்குமிடையே தொழிநுட்ப ரீதியான பேச்சுவார்த்தைகள் கடந்த ஜனவரிமாதம் நடைபெற்றன.

தற்போது நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் சேது சமுத்திரத்திட்டத்தினால் ஏற்படக்கூடிய சுற்றாடல் பாதிப்புக்கள் குறித்து ஆராய்ந்து அதற்கு தீர்வுகாண்பதே முக்கிய நோக்கமாகும்.

கடந்த நவம்பர் மாதம் இந்தியாவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி, அந்த நாட்டுத் தலைவர்களைச் சந்தித்தபின் சேது சமுத்திரம் தொடர்பான அடிப்படையிலான பேச்சுவார்த்தைகளை நடாத்த தீர்மானித்ததாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

சேது சமுத்திரத்திட்டம் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்கினால் நேற்றுமுன்தினம் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இத்திட்டத்தினால் இரண்டு நாடுகளுக்கும் பாரிய சுற்றாடல் பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும் என்று இருநாட்டு சூழலியலாளர்களும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ச-4)

## யாழ்ப்பாண முஸ்லிம் மக்களின் பிரச்சினை குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் நேற்று மாலை 5மணியளவில் யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியேறியுள்ள முஸ்லிம் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கான கூட்டம் இடம்பெற்றது.

மக்கள் பணிமனைத்தலைவர் மௌலபி சுபியான் தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் பெருமளவு முஸ்லிம் மக்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறையின் ஊடக இணைப்பாளர் இமையவனும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சிவநேசனும் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் மீளக்குடியேறியுள்ள முஸ்லிம் மக்களது பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்கும், தீர்வுகள் கண்டு நடைமுறைப்படுத்துவதற்குமான குழு தெரிவு செய்யப்பட்டது.

இக்குழுவில் வக்பு சபையால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிவாசல்களின் நிர்வாகத்தில் இருந்தும், முஸ்லிம்மக்கள் வாழுகின்ற பகுதிகளில் இருந்து பிரதிநிதிகளும் ஜமீயத் உலாமா சபை உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கி.சிவநேசன், திருமதி பத்மினி சிதம்பரநாதன், சு.சிவாஜிலிங்கம் ஆகியோருடன் யாழ்.மாவட்ட அரசியல் துறைசார்பில் இரு பிரதிநிதிகளுமாக மொத்தம் 27பேர் இடம்பெறுவர். (ச)

## குருநகரில் இன்று ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் இறங்குதுறைப் பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை வேளை கடற்றொழிலுக்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்தபோது படையினரால் அமைக்கப்பட்டிருந்த மின்சார பாதுகாப்புவேலியில் சிக்குண்டு மீனவர் ஒருவர் உயிரிழந்த சம்பவத்தைக் கண்டித்து இன்று குருநகர்ப்பகுதியில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடாத்தப்படவுள்ளது.

குறிப்பிட்ட பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும், இராணுவ நிலைகளையும் பாதுகாப்பு வேலிகளையும் அகற்றப்படவேண்டும்.

இவ்வாறு படையினரின் பாதுகாப்பு நிலையினால் மீனவர் தொழிலுக்குச் சென்று விட்டுத் திரும்பும் வேளையில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.இதனால் இதனை அகற்றுமாறு கோரியே இவ் ஆர்ப்பாட்டம் நடாத்தப்படவுள்ளது.

குருநகர் மீனவர்களினால் மேற்கொள்ளப்படும் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு கடைகள், சந்தைகள், மற்றும் நாளாந்த செயற்பாடுகளை நிறுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறும் மீனவர் சார்பில் கேட்கப்பட்டுள்ளது. அதேவேளை இவ் எதிர்ப்புப்போராட்டத்துடன் மீனவர் உண்ணாவிரதப் போராட்டத்திலும் ஈடுபடவுள்ளனர். இச்சம்பவத்தைக் கண்டித்து பல்வேறு அமைப்புகள் அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. (ச-8)

## ஜெசித்தாரா விடுதி உரிமையாளர் விடுதியில் இருந்து சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுண்டுக்குளியில் அமைந்துள்ள ஜெசித்தாரா விடுதியின் உரிமையாளர் ஜே.எகட்டனின் மரணம் தொடர்பான மரண விசாரணை நேற்று நடைபெற்றது.

இலங்கை வானொலியின் யாழ்.சேவை முகவராகவும் வேறுசில ஊடகங்களின் சிலவற்றின் விளம்பர முகவராகவும் செயற்பட்டுவந்த அவர் நேற்று முன்தினம் அவரது விடுதியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.அவர் சிலநாட்களாக காணாமல் போனதை அடுத்து அப்பகுதி மக்களால் கிராம சேவையாளருக்கு அறிவிக்கப்பட்டு கிராம சேவையாளர் பொலிஸாரின் உதவியுடன் அவரின் விடுதியில் இருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

பின்னர் எகட்டனின் உடல் மரணவிசாரணையின் பொருட்டு யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. அங்கு மரண விசாரணை நடைபெற்றது. தற்போது சடலம் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச)

எம்மிடம் சகலவிதமான ரீவிக்களும், CD, VCD, DVD PLAYER களும், சகலவிதமான றேடியோக்களும் மற்றும் மின்சார உபகர ணங்களும், உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

நியூ சிற்றி றேடர்ஸ்

மேல்மாடி இல.135/1 கஸ்தூரியார் வீதி
குளத்திற்கு முன்பாக யாழ்ப்பாணம்
T.P: 021 222 3226

பதவி வெற்றிடம்

- பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
  ஆண்கள் (இரவு /பகல் கடமை)
- பத்திரிகை விநியோகஸ்தர்கள
  (சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்போர்)

வலம்புரி நிறுவனத்திற்கு 8 கிலோமீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்கள் மட்டும் 08.07.2005 அன்று காலை 10மணிக்கு சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

ஆளணி முகாமையாளர்
வலம்புரி.

### ஐக்கிய...

நாயக ரீதியான அகிம்சைப் போராட்டத்தை முன்னெடுக்கும் குரல்களே இப் பேரணியில் ஓங்கி ஒலித்தன.

நேற்றைய பேரணியில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்து கொண்டார்.

இப்பேரணி இன்றும் காலை மீண்டும் ஆரம்பமாகவுள்ளது: இப் பேரணி எதிர்வரும் 12ஆம் திகதி மிகப் பிரமாண்டமான பேரணி கூட்டத்துடன் முடிவடையவுள்ளது. (ச-8)

### விமான...

அத்துடன் கண்காணிப்புக் குழு தலைவர் ஹொக்லண்ட் தெரிவித்த கருத்தின்படி,

தமிழ்ச்செல்வனுடனான கிளிநொச்சிச் சந்திப்பின்போது இது பற்றி வினவியிருந்ததாகவும் ஆனால் கருத்துக்கள் எதனையும் புலிகள் தெரிவிக்க மறுத்து விட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது:

ஓடுபாதையை பார்வையிடும் கோரிக்கையை கண்காணிப்புக் குழு ஒருபோதும் கைவிடக்கூடாது என்றும், தற்போது போர்நிறுத்த உடன்படிக்கையினைப் பேணுவது குறித்தே அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் பேச்சாளர் தெரிவித்தார்.

மேற்படி விமான ஓடுபாதை நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அவசியம்என்றும் புலிகள் விரைவில் அதனைப் பார்வையிட அனுமதிபார்கள் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். (ச-4)

### கரும்புலிகள்...

பிலும் மக்கள் அஞ்சலிக்காக கொண்டு செல்லப்படவுள்ளது.

கிளிநொச்சியிலும் கரும்புலிகள் தினத்தைமேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வீதிகள் எங்கும கரும்புலி மாவீரர்களை நினைவு கூரும் பதாதைகள், வீதி வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. (ச-19)

## றெஜினோல்ட் கூரே நேற்று பதவியேற்பு

(கொழும்பு)

மேல்மாகாண சபையின் முதலமைச்சராக முன்னால் முதலமைச்சர் றெஜினோல்ட் கூரே நேற்று மீண்டும் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

மேல்மாகாண சபையின் ஆளுநர் அலவி மௌலான முன்னிலையில் றெஜினோல்ட் கூரே சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

றெஜினோல்ட் கூரேக்கு ஆதரவாக 2 முக்கிய கட்சிகளின் தலைவர்கள் சத்தியக் கடதாசிகளைக் கையளித்ததைத் தொடர்ந்து றெஜினோல்ட் கூரேயை முதலமைச்சராக நியமித்ததாக ஆளுநர் அலவி மௌலானா தெரிவித்தார்.

றெஜினோல்ட் கூறே பதவிப்பிரமாணம் செய்வதற்கும் அவருக்கு ஒத்துழைப்பு வழங்க ஐக்கிய தேசியக்கட்சி உட்பட வேறுபல கட்சிகளும் ஆதரவு வழங்கியுள்ளன. றெஜினோல்ட் கூரே முதலமைச்சராக பதவிப்பிரமாணம் செய்துகொண்டபின் பிரசன்ன ரணதுங்க, காமினி திலகசிறி, திலீப் விஜயசேகர ஆகியோர் மாகாண அமைச்சர்களாக பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர். (ச-8)

## நினைவுக்கல் திரைநீக்கம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 03.04.1996 அன்று யாழ்.வடலியடைப்பு பகுதியில் சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதலின்போது வீரச்சாவடைந்த கப்டன் நித்தியா(தங்கராஜா சாரதா கீரிமலை யாழ்ப்பாணம்) என்ற மாவீரரின் வீரவணக்கக் கூட்டமும் நினைவுக்கல் திரைநீக்கமும் நேற்று கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் இடம்பெற்றது.

முன்னதாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்ல மண்டபத்தில் நீர்வேலி அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்பருத்தி தலைமையில் இடம்பெற்று வீரவணக்க நிகழ்வில் ஈகச்சுடரினை மாவீரரின் தாயாரும் மலர் மாலையினை மாவீரரின் சகோதரரும் அணிவித்தனர். அஞ்சலி நிகழ்வையடுத்து நினைவுரையினை சங்கானை கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்பு நிகழ்த்தினார். பின்னர் நினைவுக் கல்திரை நீக்கம் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் பெருமளவான மக்களும் போராளிகளும் கலந்து கொண்டனர். (ச-8)

நிறைஞ்சனாஸ் சினிமா
சங்கானை
COLIN TARIL, ANJELINAJOLIE
And ANTONY HOPKINS
நடித்த
ALEXANDER
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாதன்ஸ்
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
அஜித், தேவயானி நடித்த
காதல்கோட்டை (இன்று மட்டும்)
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
05.07.2005 செவ்வாய் முதல்
6'2"

மனோகரா
யாழ்ப்பாணம்
ஷங்கரின் இயக்கத்தில்
சியான் விக்ரம்.சதா.
விவேக் ஆகியோ
ரின் சிறப்பு நடிப்பில்
அந்நியன்
கா.நே: 10.30, 2.30,
6.30, 9.30



இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.